ஜநவிநோதிநி.

இல. 6.] ஜூன்மீ 1882. [புஸ்த. XIII.

கான்ஸ்தாந்திநோபில் நகரம்.

துருக்கிதேசத்து ராஜதானியான கான்ஸ்தாந்திநோபில் என்னும் நகரமானது ஐரோப்பாகண்டத்துத் தென்புறத்திலே, ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் மத்தியிலுள்ள மார்மோரா கடற்கரையில் பதின்மூன்று மைல் விசாலமாய் முக்கோணவடிவமான ஒரு சமபூமியில் இருக்கின்றது. ஆசியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் அதிக சமீபமானவிடம் அதுதான். அவ்விடத்தில் ஒரு சாதாரணமான படவு ஒரு கரையிலிருந்து மற்றொரு கரைக்குக் கால்மணிநேரத்தில் போகும். பட்டணத்துக் கோட்டைச்சுவர்க்கு வெளியே வீடுகளும் இல்லை; பயிர்களும் விசேஷமாயில்லை. அந்நகரத்திலே ராஜாங்கத்தைச் சேர்ந்த முக்கியமான மசூதிகள் பதினான்கு இருக்கின்றன. அவையெல்லாம் மிகவும் அலங்காரமாயும் பல தூபிகளுள்ளவையாயும் இருக்கின்றன. அவை தவிர இன்னும் 60 பெரிய மசூதிகளும் 200க்கு அதிகமான சிறிய மசூதிகளும் அந்நகரத்தில் உண்டு. ஆனால் அவையெல்லாவற்றுள்ளும் மிகப் பிரசித்திபெற்றது ஸெண்டு ஸோபியா என்னும் மசூதியாம். அரசன் வழக்கமாய்ப் போய் தொழுதுகொள்ளுகிற மசூதி அதுதான். ஆதியில் அது 269 அடி நீளமும், 143 அடி அகலமும் உடையதாய், 250 அடி உயரமுள்ள கும்மட்டத்தோடு சிலுவைவடிவமாய்க் கட்டப்பட்ட ஒரு கிறிஸ்தவக் கோயிலாயிருந்தது. பின்பு துருக்கர்கள் அத்துடன்கூட நான்கு கும்மட்டங்கள் கட்டுவித்தார்கள். கிறிஸ்தவக் கோயிலாயிருந்தபோது அவ்விடத்தில் சலவைக்கல்லினால் செய்த சித்திரங்கள் பல இருந்தனவாயினும், அவையெல்லாம் அநேகமாய் அழிக்கப்பட்டன. பக்கத்துப்படத்து வலதுகைப்புறத்திலிருக்கும் சித்திரம் அந்தக் கோயிலின் அழகை விளக்குகின்றது. சிலகாலத்திற்குமுன்னே இந்த மசூதி விழுந்துபோம்படியான அபாயஸ்திதியிலிருக்கிறதென்று கேட்டு அந்நகரத்தாரெல்லாம் மிகவும் திகில்கொண்டார்கள். ஏனெனில், அது எப்போது விழுந்துபோகிறதோ அப்பொழுது உடனே

அந்த ராஜ்யத்துக்கு அழிவு உண்டாகும் என்று துருக்கியர்களுள் ஒரு வதந்தியுண்டு. அதனால் அது 1849-ஆம்ஸத்தில் வெகு திரவியம் செலவுசெய்து இத்தாலியாதேசத்துச் சிற்பியைக்கொண்டு செப்பனிடப்பட்டது. அப்போதும் அந்த வேலை வெகு சீராய்ச் செய்யப்பட்டதாகத் தோன்றவில்லை. ஏனெனில், 120 அடி குறுக்களவும் 250 அடி உயரமுள்ள அதின் பெரிய கும்மட்டம் உறுதியற்று அபாயமான நிலையிலேயே நிற்கின்றது. எந்தநிமிஷத்தில் வேண்டுமானாலும் அது விழுந்துபோகக்கூடுமென்று அதைச் செப்பனிட்ட சிற்பியே சொல்லியிருக்கிறார். மற்ற விஷயங்களில் அதன் உட்புறம் வெகு சீர்மையாகவே நிருமிக்கப்பட்டிருக்கின்றது. அதில் வைத்துக் காப்பாற்றிவரும் பூர்வகாலத்துப் பல அடையாளங்களுள் ஒரு கம்பளம் உண்டு. அதன்மேலே நின்று தான் மகம்மது தோத்திரம் செலுத்துவது. அந்தக் கம்பளம் தொங்குமிடத்துக்குச் சமீபத்தில் ஒரு பிரசங்கபீடமுண்டு. அந்தப் பீடத்திலே குரான் என்னும் துருக்கவேத புத்தகத்தை வைத்துக் குருக்கள், அந்த மசூதி கத்தியாலேயே ஜயிக்கப்பட்டதென்பதற்கு அறிகுறியாய்க் கையில், கத்தியை உருவிவைத்துக்கொண்டு வெள்ளிக்கிழமைதோறும் படிப்பது வழக்கம். அதன் சுவர்களில் பச்சைவர்ணம் பூசிய பாவுகற்கள் நாட்டி அவற்றின்மேல் குரான் வேதத்தின் வாக்கியங்கள் பொன் எழுத்துகளால் வரையப்பட்டிருக்கின்றன. இவ்வளவிருந்தும் அப்பட்டணத்தில் நீர்வளம் போதாது. ரோமதேசத்தார் ஆண்டகாலத்திலே பல நீர்த்தாக்குகளும் நீர்க்கால்களும் இருந்தனவாயினும் அவைகள் அநேகமாய் அழிந்துபோயின.

கடலிலிருந்து பார்க்கும்போது அந்நகரம் இப்படத்தின் இடதுகைப்புறத்துச் சித்திரத்தில் காட்டியபடி வெகு நேர்த்தியான காட்சி அளிக்கின்றது. அங்குள்ள கப்பல்ரக்ஷணஸ்தானங்களெல்லாம் வெகு விசாலமாயும் பத்திரமானவிடமாயும் இருக்கின்றன. அந்நகரத்து வெளிக்காட்சி இப்படி வெகு விசித்திரமானதென விசேஷமாக வர்ணிக்கப்பட்டிருக்கின்றதாயினும், நகரத்தினுள்ளே அவ்வளவு பெருமையில்லை. தெருக்களெல்லாம் அற்பமானவைகள்; குடிகளோ மிகவும் வறுமையால் வருந்துகிறவர்கள். தெருக்களில் திருட்டும் கொள்ளையும் மிகவும் அதிகம்; பொழுதுபோனால் ஒருவரும் வெளியே வரக்கூடாது. பகற்பொழுதிலும் அநேகர் கையில் துப்பாக்கி எடுத்துக்கொண்டே வெளியில் சஞ்சரிக்கின்றனர். தேசமெங்கும் மிகுதியாகச் சீர்திருத்தம் பெற்றுவருகின்ற இக்காலத்திலும் அந்நகரம் இப்படிப்பட்ட ஈனஸ்திதியிலிருக்கிறதாவென்று அநேகர்க்கு இதைக் கேட்க ஆச்சரியம் உண்டாகும். ஆயினும் இந்த நிலை இப்படியே நெடுநாள் நீடித்திராது; சீக்கிரமே மாறுபடுமெனத் தோன்றுகிறது.

ஜலத்தினுல் உண்டாகும் சௌக்கியத்தைப்பற்றிய உபந்நியாஸம்

(தொடர்ச்சி.).

வாந்திபேதிமுதலிய வியாதிகள் தண்ணீரால் பரவுவது.

வாந்திபேதிமுதலிய கொள்ளைநோய்கள் தண்ணீரினுல் விசேஷமாகப் பரவுகின்றன என்று நான் சொன்னதற்கு அத்தாட்சி என்னவென்று நீங்கள் ஒருவேளை கேட்கலாம். வாந்திபேதி பரவுதற்காவது உற்பத்தியாவதற்காவது ஜலமே முக்கியகாரணம் என்று நான் ஒருபோதும் சொல்லவில்லை. ஆனுல் அதைப்பற்றி என்னுடைய அபிப்பிராயம் ஒருதன்மையானது. அவற்றையெல்லாம் வெளியிடுவதற்கு இது தருணமன்று. ஆயினும் நாம் சுவாஸம் வாங்கிவிடுகிற காற்று, உடுக்கும் உடை, உண்ணும் உணவு, தண்ணீரோடுகூட இன்னும் இதரமான பற்பல பானவகைகள் ஆகிய இவை அனைத்துமே கொள்ளைநோய்கள் உண்டாகிப் பரவுவதற்குக் காரணமாகின்றனவெனத் தோன்றுகிறது. ஆயின் முக்கியமாய் இவ்விந்தியாவில் மாத்திரம் தொத்துநோய் பரவுவதற்குத் தண்ணீரே முதற்காரணமென்றும், இத்தேசத்தில் தண்ணீரை ஒரு தன்மையாக நடத்துவதனுலேயே நோய்கள் விடாமல் தொடர்ந்துவருகின்றனவென்றும் என் புத்திக்குப் புலப்படுகின்றது. இதற்கு நான் பல திருஷ்டாந்தங்கள் கண்டிருக்கிறேனுதலால், அவற்றுள் இப்போது இங்கே எடுத்து உதாகரிக்கத்தக்கது எதுவென்று ஆய்ந்துபார்க்கவேண்டியதாயிருக்கிறது.

தண்ணீருக்கும் வாந்திபேதிக்கும் இவ்விதமான சம்பந்தம் உண்டென்று முதல்முதல் கண்டறிந்தவர் லந்தன் நகரத்து டாக்டர் ஸ்னே என்பவர். அவர் கண்டு சொன்ன ப்ராட் ஸ்ட்ரீட் (Broad-street) என்னும் பெரிய வீதியின் செய்தியைச் சமயம்நேர்ந்தபோதெல்லாம் மேற்கோளாய் எடுத்து உதாகரிப்பதுண்டு. 1854-ஞூத்தில் அவ்விடத்திலே நல்ல சவுக்கியமான ஸ்திதியிலுள்ள குடிகளுக்கெல்லாம் வாந்திபேதி காணலாயிற்று. அதன் காரணம் இன்னதென்று கண்டுகொள்ளும்பொருட்டு அக்கம் பக்கங்களில் நடந்த ஸங்கதிகளை நுட்பமாய் விசாரித்தறியப் புகுந்தனர். விசாரிக்கையில் அந்த வீதி 40-வது நம்பர் வீட்டிலே ஒரு குழந்தைக்கு வாந்திபேதி கண்டு இறந்துபோனதாகவும், அண்டையயல்களிலுள்ள ஜனங்களெல்லாம் அநேகமாய்த் தண்ணீர்கொண்டுபோகும் ஒரு பிரசித்தமான கிணற்றுக்குச் சமீபத்திலுள்ள ஒரு சாக்கடைக்குழியில் அக்குழந்தையின் மலங்களையெல்லாம் கொண்டுபோய்க் கொட்டினதாகவும் தெரியவந்தது. மேலும் அந்தக் குழியின் கட்டடத்துக் கற்க

ளெல்லாம் தளர்ந்து அதிலுள்ள அழுக்குகளெல்லாம் அடுத்த கிணற்றிலே போய் விழும்படி இருந்ததாகவும் தெரியவந்தது. ஒரேதினத்தில் 140-150பேருக்கு வியாதி கண்டது. விசாரிக்குமளவில் அப்படி வியாதி கண்டவர்களெல்லாரும் அந்தக் கிணற்றின் தண்ணீரையே சிலநாளாய்க் குடித்துவந்ததாக வெளிப்படையாயிற்று. அந்தத் தண்ணீரை ஒருவரும் உபயோகிக்கக்கூடாதென்று திட்டம்செய்த போது அந்த வியாதி அடங்கிப்போயிற்று. அதில் நாம் அதிக ஆவலோடு கேட்டறியத்தக்க செய்தியொன்று உண்டு. அதாவது, அந்தப் பெரிய வீதிக்கு அப்பால் வெகுதூரத்திலே ஓரிடத்தில் 59 வயதுள்ள ஒரு கிழவிக்கு இந்த வாந்திபேதி கண்டு அதனால் பிராணபயம் நேரிட்டது. அந்தக் கிழவி சிலநாளைக்குமுன்னே அப்பெரியவீதியிலே வசித்தவள். நாள்தோறும் அந்த வீதியிலுள்ள கிணற்றுத் தண்ணீரை வண்டியில் அடித்துக்கொண்டுபோய் அக்கிழவி குடியிருக்குமிடங்களில் கொடுப்பதுண்டு. அவள் அந்தத் தண்ணீரையே குடித்து வழக்கப்பட்டவளாதலால், மற்றத் தண்ணீர் எல்லாவற்றைப் பார்க்கிலும் அதிலேயே அவளுக்கு விருப்பம் அதிகம். அவளோடுகூட அவளைப் பார்க்கவந்த ஒருத்திகூட அப்போது அந்தத் தண்ணீரைக் குடித்தாள். பார்த்துவிட்டுத் தன் வீட்டுக்குப் போனவுடனே அவளும் வாந்திபேதி கண்டு இறந்து போனாள். அப்போது அவ்விடத்திலாவது அதற்குச் சமீபங்களிலாவது வாந்திபேதி இல்லவேயில்லை. இதனால் அந்தத் தண்ணீரினாலேயே வாந்திபேதி கண்டதென வெளிப்படையாகின்றதல்லவா?

இந்தச் சங்கதியைப்பற்றி ரோமன்காதலிக் மதாசாரியர் ஒருவர் ஒரு கதைசொல்லக் கேட்டிருக்கிறேன். அதனால் ஐரோப்பாவிலேகூட இந்த வியாதிகளெல்லாம் தெய்வம் சீறுவதனால் உண்டாகின்றவையென்னும் கொள்கை வெகுவாய் உண்டெனத் தெளிவாகின்றது. மிகப் பிரசித்திபெற்றவரான ஒருவர் இந்த மதாசாரியரைப் பார்த்து, ஐயா இப்போது எங்கும் மும்மரமாயிருக்கின்ற இந்தக் கொள்ளைநோய் நீங்கும்படி சுவாமிக்குக் கோபம் தணியும்பொருட்டு வந்தனைவழிபாடுசெய்ய நீங்களே தலைமையாயிருந்து ஒரு தினம் ஏற்படுத்திக் காரியத்தை நடத்துவீர்களா என்று கேட்டதற்கு, அவர், ஐயா நாம் முதலில் சாக்கடைகளையெல்லாம் நன்றாய்ச் சுத்திசெய்து ஜலாதாரங்களையும் செம்மையாய்ப் பரிபாலித்துவருவோம்; அதனால் நமக்குக் காரியசித்தி உண்டாகாதபக்ஷத்தில், உம்மிஷ்டப்படியே நாம் அவசியம் சுவாமிக்குப் பிரார்த்தனை செலுத்தப்போகலாம் என்றார். இவ்விதமாகவே இந்தக் கொள்ளைநோய் தெய்வம் சீறுவதனாலே உண்டாகிறதென்ற கெட்ட அபிப்பிராயம் இத்தேசத்திலும் அநேகருக்கு உண்டு. மேலும் அப்படிச் சீறிவருகிற தெய்வத்துக்குத் தமிழ்ப்பாஷையில் மாரியம்மை, மாரியாத்தாள் என்றும், தெலுங்கு பாஷையில் அம்மவாறு என்றும்

பெயரிட்டு வழங்குகின்றனர். ஆயின் இவ்விஷயத்தில் என் கொள்கையே சரியென்றும் அவர்களுடைய கொள்கை சரியல்லவென்றும் நான் உறுதியாய்ச் சொல்லி ஜனங்களுடைய மனதை நோவச் செய்யவேண்டுமென்ற பிடிவாதம் எனக்கு இல்லை. ஆயின் ஒன்று: நாம் சொல்வது பிசகாயிருந்தாலும் அது ஒருவர்க்கும் பொல்லாங்குசெய்யாதல்லவா? அழுக்குத்தண்ணீருக்குப் பதிலாகச் சுத்தமான தண்ணீரைக் குடித்தால் யாருக்கு என்னதீங்கு உண்டாகும்? அப்படி நாம் செய்வதனால் தெய்வத்துக்குத்தானுகட்டும் எவ்விதமான கோபமும் உண்டாவதற்கு நிமித்தம் ஒன்றுமில்லையே: அப்படியன்றி மற்றொரு பக்ஷம் பிசகாயிருக்குமாயின், அவரவர்க்கு அமைந்த யுக்திஆலோசனைகளைக் கொண்டு கொள்ளைநோய்களின் காரணங்களைக் கண்டுபிடித்து, கூடுமானால் அவற்றைப் பிரஜைகள் விலக்கும்படி செய்துகொள்வதற்கில்லாமல், ஒரு பயங்கரமான அபிப்பிராயம் அவர்கள் மனதில் நிலைநாட்டப்படுகின்றதல்லவா?

இதற்கு உதாரணமாய் நான் கண்டவிஷயம் ஒன்றுண்டு: திருநெல்வேலிச் சீமையிலுள்ள வடுகன்குளம் என்னும் ஊரில் சென்ற 1877-ஆுத்தில் வாந்திபேதி உண்டாகி வெகு சேதம் நேரிட்டது; ஆனால் அது உயர்ந்த ஜாதியரான பிராமணர்களுக்கே வெகு வாய்க் கண்டது. அதற்குச் சமீபத்திலேயே இருந்த சூத்திரர் முதலிய இழி ஜனங்களுக்குக் காணவேயில்லை. இந்தக் கொள்ளை நோய் தெய்வத்தால் வருவதென்று சொல்லுகிறவர்களுடைய அபிப்பிராயப்படி பார்த்தால், அதற்குக் காரணமான தெய்வம் பிராமணர்களாகிய உத்தம ஜாதியாரிடத்தில் கோபங்கொண்டதென்றும், அது காணுத இழிஜனங்களிடத்தில் கோபங்கொள்ளாமல் சாந்தமாயிருந்ததென்றுமல்லவோ சொல்லவேண்டியதாகின்றது? ரெவெரெண்டு தெல்பெக்கு என்பவர் இவ்விஷயத்தில் சொல்லியிருப்பதைக் கேட்டால் இன்னும் அதிசயமாயிருக்கும். இத்தேசத்தில் உயர்ந்த ஜாதியார் தமக்கென்று சில கிணறுகளைத் தனியே வழங்கி வருவதை அவர் நன்றாய்க் கண்டறிந்து அதைப்பற்றித் தம் அபிப்பிராயத்தையும் தெளிவாய்ச் சொல்லியிருக்கிறார். அதாவது, தாழ்ந்தஜாதி ஜனங்கள் போய் அக்கிணறுகளைத் தீண்டுவதில்லையென்பது மெய்தான்; ஆயினும் அதன் அருகே ஸ்நாநம்பண்ணித் துணிதோய்ப்பது முதலியவற்றால் சிந்தும் அழுக்குத்தண்ணீரெல்லாம் மறுபடி அந்தக் கிணற்றிலேயே ஊறிப்போம்படி அதன் கட்டடம் அத்தனை கேடுகெட்டதாயிருக்கிறதென்கிறார். நான் யாத்திரைபோன விடங்களிலும் இவ்விதமாய் அநேகம் கண்டிருக்கிறேன். முதலில் நன்றாய்க் கட்டப்பட்டிருந்தாலும் நாளளவிலே பழுதுபட்டு அநேகம் கிணறுகளில் மேல் அழுக்குநீர் ஊறும்படி துவாரங்கள் உண்டாயிருக்கின்றன. கோயம்புத்தூரில் அப்படிப்பட்ட கிணறு ஒன்று உண்டு. அப்பட்டணத்து நடுவே அநந்த ஐயர் கிணறு என்று சில

சூத்திரர்கள் வெட்டி நன்றாய்க் கட்டிவைத்த பிரசித்தமான கிணறு ஒன்று இருக்கின்றது. அதைக் காலையில் பிராமணர்களும் பகற்பொழுதுக்குமேல் சூத்திரர்களும் உபயோகப்படுத்திக்கொள்கிறார்கள். அக்கிணறு கட்டுவதற்கு வெகு செலவு பிடித்திருக்கும். வாஸ்தவத்தில் அது நல்ல கிணறுதான். எப்படிப்பட்ட கோடை காலத்திலும் அதில் தண்ணீர் வற்றுவதில்லை, தண்ணீரும் மிகத் தெளிவாயிருக்கும். ஆயினும் இப்போது கண்ணும் கருத்துமாய்ப் பாராமல் உபேக்ஷை செய்வதனால் அது நாளுக்குநாள் கெட்டுப் போய்க்கொண்டிருக்கிறது. அக்கிணற்றைச் சுற்றிலுமுள்ள தளவரிசைகளெல்லாம் தளர்ந்து, அங்கே ஜனங்கள் வந்து துணிதோய்த்து ஸ்நானம்பண்ணும் அழுக்குத்தண்ணீரெல்லாம், முதலில் அவர்கள் உத்தேசித்துக் கட்டடம் கட்டியதுபோலவே அவ்விடத்தில் தங்காது அப்புறம்போய்ச் சேராமல், மறுபடியும் அக்கிணற்றிலேயே போகின்றது. அந்தத் தண்ணீரையே ஜனங்கள் வீட்டுக்குக் கொண்டுபோய்க் குடிப்பதற்கு உபயோகப்படுத்துகிறார்கள். இதில் என் மனதுக்கு மிகவும் ஈனமாய்த் தோன்றுவதொன்று உண்டு. தொத்துநோய்கள் உண்டாகின்றனவென்பதிருக்கட்டும்; நம் அண்டைவீட்டுக்காரர் தம் உடம்பைக் கழுவிக் குளித்துத் துணியும் தோய்த்த அழுக்குத்தண்ணீரை நாம் குடிப்பதென்றால் அது நம்முடைய மனதுக்கு ருசிக்குமா?

இப்படிப்பட்ட செய்கைகளால் ஜனங்கள் எவ்வளவு சுலபத்தில் விஷமூட்டப்படுகிறார்கள் சற்று யோசித்துப்பாருங்கள். தனக்கு வாந்திபேதி காணப்போகிறதருணத்தில் அந்த வேதனையோடு தேசாந்தரத்திலிருந்துவந்த ஒருவன் நாம் மேற்சொன்ன குளங்கள் கிணறுகளுள் ஒன்றில் ஸ்நானம்பண்ணி அழுக்குத்துணி தோய்க்கிறான். கிணறானால் அவ்வழுக்குத் தண்ணீரெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாய் மேற்புறத்திலிருந்து அக்கிணற்றுக்குள்ளே பொசிகின்றது. குளமானால் கேட்கவேண்டுவதேயில்லை; அவன் உடம்பின் அழுக்கெல்லாம்தானே அக்குளம் முழுதும் வியாபிக்கின்றது. அவன் ஸ்நானம்பண்ணிப்போனவுடனே ஒரு பெண்பிள்ளை வந்து அந்தத் தண்ணீரைத் தன் வீட்டின் உபயோகத்திற்காகக் கொண்டுபோகிறாள். உடனே அவ்வீட்டில் வாந்திபேதி மும்மரமாய்க் காண்கிறதென்றால் அதைக் கண்டு நாம் ஆச்சரியப்படவேண்டுமோ! குடிக்கிற தண்ணீரில் அந்த வழிப்போக்கன் கொஞ்சம் வசநாபியாயினும் பாஷாணமாயினும் கலந்து குடிகளைக் கொன்றாலென்ன? தன் உடம்பழுக்கைத் தண்ணீரில் கழுவிவிட்டுத் தன் நோயைத் தொடரச்செய்து அதன்மூலமாய்க் கொன்றாலென்ன? இரண்டும் ஒன்றுதான். ஆனால் இதற்கு ஒரு சாக்குச் சொல்லலாம். அதாவது, தெரியாமையாலும் அபுத்திபூர்வமாயும் செய்ததாகையால் இது தோஷமல்லவென்னலாம். ஆயினும் தருமசாஸ்திரத்தில்

இந்தச் சாக்கு சற்றும் பயன்படாது. ஒருவன் ஒரு காரியத்தை எவ்வளவு தெரியாமையோடு செய்தாலும், அதனால் உண்டாகும் நன்மை தீமைகளை யோசிக்காமல் செய்து, அதனால் குடிகளுக்குத் துன்பமாவது பிராணாபாயமாவது நேரிட்டால், அப்படிப்பட்டவனுக்குத் தருமசாஸ்திரம் அவசியம் சிக்ஷைவிதிக்கின்றது. இப்போது இந்தச் சபாமண்டபத்தின் வெளிப்புறத்திலிருந்து ஒருவன் துப்பாக்கி வெடிதீர்த்து இங்குள்ளவர்களுள் ஒருவனைக்கொன்றதாக வைத்துக்கொள்வோம். இதற்குள் மனிதர்கள் இருப்பது தனக்குத் தெரியாதென்று அவன் சாக்குச்சொல்லுகிறான்; ஆயினும் தருமசாஸ்திரம் அவனைக் குற்றவாளியல்லவென்று விலக்காது. தாம் செய்யும் செய்கையால் விளையும் நன்மை தீமைகளை அவரவரே கண்டுபிடித்து அதற்கேற்ற முன்ஜாக்கிரதை யெடுத்துக் கொள்ளவேண்டியது அவரவருடைய கடமையாம். ஒருவனை அடித்து வேதனை உண்டாக்கினாலும் அல்லது கொன்றாலும் அதற்கேற்ற தண்டனையை அவன் அடையவேண்டியது அவசியம். அப்படியிருக்க மேற்சொன்ன வழிப்போக்கன் ஆயிரக்கணக்காய் அநேகரைக் கொல்கிறான். ஆயினும் அவன் செய்கையை ஒருவரும் கவனிப்பதில்லை, அந்தக் குற்றம் சட்டப்படி தண்டிக்கத்தக்கதாயிருக்க, அவன் குற்றவாளியாகாமல் யதேச்சையாய்த் திரிகிறான்; நாட்டார் வழக்கத்தின்கீழ்க் கொண்டுவர விரும்பினால், பீனல்கோட் என்னும் தண்டனைச் சட்டத்திலும் இதற்கு நியாயமிருக்கின்றது. அதாவது, "பலபேர்க்கு உபயோகமாம்படி ஏற்படுத்திய நீர்த்தாக்குகளை அழுக்குமுதலியவற்றால் வேண்டுமென்று கெடுக்கின்றவனுக்கு மூன்றுமாதம்வரையில் காவலாவது ஐந்நூறு ரூபாய் வரையில் அபராதமாவது இவ்விரண்டுமேயாவது தண்டனை விதிக்கவேண்டும்" என்று 14-வது அதிகாரம் 277-ம் பிரிவில் சொல்லுகின்றது. மேற்சொன்ன குளத்தில் வியாதியோடுவந்து முழுகிய மனிதனை இந்த விதிக்கு அகப்படாமல் விலக்குகிறது எது? அவன் தோய்த்த அழுக்குத்துணி குறுக்கே வந்து நிற்குமோ? ஆதலால் பானத்துக்குமாத்திரமேயென்று நிர்ப்பந்தப்படுத்திச் சில குளங்கள் தனியே வைக்கப்படுமானால், சீக்கிரத்தில் அதுவே ஒருவேளை ஒரு வழக்கமாகித் தேசத்தார் அனைவராலும் அங்கீகரிக்கப்படலாகும்; அப்போது கொள்ளைநோய்களுக்கு உரியகாரணங்களும் வெகுவாய்க் குறைந்துபோம்.

வாந்திபேதியானது தனக்குச் சுவாதீனமானவர்களை உபத்திரவப்படுத்துவதிலும், வெகுசீக்கிரமாய் உயிரைவாங்குவதிலும் அனைவரும் அஞ்சி நடுங்கத்தக்க நோய்தானாயினும், இத்தேசத்தில் அதிகமாய்ப் பிரஜைகளைப் பீடித்துக் கொல்லுகிற நோய் இதுவன்று; அப்படி அதிகமாய்க் கொல்வது சுரந்தான். அந்த சுரத்துக்கு முதற்காரணம் கெட்டதண்ணீரேயென்று நான் உறுதியாய்ச் சொல்

லுவேன். ஆயின் அதை உடனே நிதர்சனப்படுத்திக் காட்டுவது மாத்திரம் அத்தனை எளிதானதன்று. மேலும் இத்தேசத்தாரே பலவிடங்களில் சில தண்ணீர் காய்ச்சல் உண்டாக்குகிறதென்று உறுதியாய்ச் சொல்லுகிறார்களல்லவா? இப்படி ஜனங்களை விசேஷமாக வதைப்பது இந்தச் சுரம்மாத்திரமேயல்ல; இன்னும் அநேகம் உண்டு. சென்ற 1879-ஆத்தில் வயிற்றுக் கோளாறுகளால் 2,50,000 பேர் உயிரிழந்தார்கள். அவ்வருஷம் மரணத்தின்அளவு ஏற்றத்தாழ்ச்சியில்லாமல் சமமாயிருந்ததனால் அதையே நான் இங்கு உதாரணமாய் எடுத்தேன். இந்த வயிற்றுவேதனை இத்தேசத்துப் பிரஜைகளுக்கு வெகுவாய்த் துர்ப்பலமும் பொறுக்கக்கூடாத துன்பமும் உண்டாவதற்கு முதற்காரணமாய் இருக்கின்றது. ஔஷதசாலைகளிலும் வைத்தியசாலைகளிலும் பல வருஷங்களிருந்து பழகினால், இந்த நோயினால் வருந்துகிறவர்களின் தொகை இவ்வளவு எனக் கண்டுகொள்ளலாம். இப்படி வயிற்றிலே ஒருவிதமான பூச்சி உற்பத்தியாகி அதனால் இத்தேசத்து எளியஜனங்கள் எத்தனைபேர் வாயினால் இத்தன்மையதென்று சொல்லவொண்ணாத வேதனை அனுபவிக்கிறார்கள் தெரியுமா? அந்த வேதனை பொறுக்கமாட்டாமல் கிணறுகளிலும் குளங்களிலும் விழுந்து பிராணனைவிட்டவர்கள் அநேகர். குளங்களிலுள்ள அழுக்குத்தண்ணீரைக் குடிப்பதும் அதிலேயே சோறுசமைத்துத் தின்பதுமாகிய கெட்டவழக்கத்தினாலேதான் இந்தப் பிரமாதங்களெல்லாம் விளைகின்றன.

(இன்னும் வரும்.)

அபாயத்துக்கு இடமான ஒரு தீவு.

இத்தாலியாதேசத்துக் கதை (தொடர்ச்சி.)

ஜகந்நாதன் த்வீபாந்தரத்திலே ஒரு சீமாட்டி மோசமாய்க் கொடுத்த மதுவைக்குடித்து மெய்ம்மறந்து கண்ணயர்ந்துபோனானே! அதற்குப் பிறகு என்னவாயிற்று என்கிறீர்களோ? அந்தத் தீவின்அரசி விடியனேரத்திலேயே எழுந்து நடந்தசெய்தி இன்னதெனத் தெரிந்துகொண்டு ஜகந்நாதன் கொண்டுவந்த கப்பலைக் கொள்ளையிடும்படி திட்டஞ்செய்தாள். போய்ப் பார்க்கையில் அந்தக் கப்பலிலிருந்த சாமான்களெல்லாம் மிகவும் அற்புதமானவைகளாயும் விலைபெற்றவைகளாயும் இருந்தன. அவற்றையெல்லாம் கொள்ளையிட்டபிறகு காவற்காரன் ஒருவன் வந்து உடம்புதெரியாமல் தூங்குகிற ஜகந்நாதனை எழுப்பி, ஐயா, நீங்கள் வந்தகாரியமாயிற்றே! சுவாமியைத் தியானித்துக்கொண்டு இனி ஊர்போய்ச் சேரலாம் என்றான். அந்தப் பேச்சைக் கேட்டவுடனே அவன், ஓகோ! இவர்களுடைய மாயையிற் சிக்கி மோசம்போனேமே

யென்று மிகுந்த வெட்கமும் விசனமுமடைந்தான். பின்பு அந்தத் தீவின் அரசியும் அவனை வந்துபார்த்து விசாரித்து, அவனுக்கு ஏறிச் செல்வதற்கு ஒரு குதிரையும் வழிச்செலவுக்குவேண்டிய திரவியமும் கொடுத்து அவனைச் சுதேசம் போகவிடுத்தாள். அவனும் வேறுவிதியில்லாமல் விசாரப்பட்டுக்கொண்டே சுதேசத்துக்குப் போய்விட்டான். வெனிஸ்நகரம்போய்ச் சேர்ந்தும், தான் கொண்டுபோன பொருள்களையெல்லாம் அநியாயமாய்ப் பறிகொடுத்துவிட்டு வெறுங்கையனாய்த் தந்தையின் வீட்டில் நுழைய அவனுக்கு மனந்துணியவில்லை. அதனால் இராக்காலத்தில் தன் தோழன் ஒருவனுடைய வீட்டிலே போய்ச் சேர்ந்து அங்கேயே சிலநாள் இருந்தான். அப்போது ஒருநாள் அந்தத் தோழன் இவனைக் கண்டு, உன் செய்தி என்னவென்று கேட்டதற்கு ஜகந்நாதன், அப்பா நான் கப்பலேறிக் கடலிலே போகையில் ஒருநாள் ராத்திரி கப்பல் உடைந்து சுக்கல்சுக்கலாய்ப் போயிற்று. அப்போது அருகாமையில் அகப்பட்ட ஒரு துண்டுப் பலகையை நான் பற்றிக்கொண்டேன்; தெய்வாதீனமாய் அது கரைவந்து சேர்ந்ததனால் நான் தப்பிப்பிழைத்து இங்குவந்து உங்களோடு கூடும்படியானேன் என்றான்.

இதற்கு இடையிலே, கப்பலேறிப்போன மகனைப்பற்றி ஒரு செய்தியும் தெரியவில்லையே! ஒருவேளை கப்பல் திசைதப்பி எங்கேயாவது போய்விட்டதோ, அல்லது அபாயமே ஏதாவது விளைந்ததோ? என் மனம் ஒன்றும் தோன்றாமல் அலைபாய்கிறதேயென்று சொல்லிக் குணசீலன் மிகவும் துக்கித்துக்கொண்டிருந்தான். அப்போது ஒருநாள், ஜகந்நாதனுக்கு ஒரு தீங்குமில்லை; அவன் க்ஷேமமாக வந்திருக்கிறானென்ற செய்தியைக் கேட்டு, பொருள்போனாற் போகிறது, பிள்ளை பிழைத்து வந்தானேயென்று தகப்பன் அதிக சந்தோஷமடைந்து, அப்புறம் ஒரு நிமிஷங்கூட அவனைப் பாராதிருக்க மனம்பொறாமல் உடனே அவனைக் கண்டு களிப்படையும்படி அவன் இருக்குமிடம் தேடி ஓடினான். அவன் அவ்வருமை மகனைப் பார்த்தவுடனே ஆநந்தம் உள்ளடங்காமல் அவனை ஆலிங்கனம் செய்துகொண்டு, என் செல்வக்குழந்தாய், பொருள் போய்விட்டதற்காக நீ சற்றும் விசாரப்படவேண்டாம்; வேண்டுமானால் அதைப்போல் எவ்வளவோ பொருள் தேடிக்கொள்ளலாம். ஒரு அபாயமுமின்றி நீ வந்து சேர்ந்தாயே அதுவே எனக்குக் கோடி திரவியம் வந்ததுபோலாயிற்று என்று இப்படிப் பலவிதமாய்ப் பேசி அவனைக் களிக்கச்செய்து வீட்டுக்கு அழைத்துக்கொண்டுபோனான். அவ்விடத்தில் முன்போலவே அனைவரும் சிலகாலம் சுகமாய்க்கூடி வாழ்ந்திருந்தார்கள்.

இது இப்படியிருக்க, ஜகந்நாதனோடுகூடக் கப்பலேறிச்சென்ற அவன் தோழர்கள் இருவரும் வெகுநாள் முன்னமே காரியசித்தி

யோடு திரும்பிவந்து, ஜகந்நாதன் எந்தவழியாய்ப் போனுனோவெ ன்று சங்கித்துக்கொண்டிருந்தார்கள். அவர்களைப் பார்த்தபோது ஜகந்நாதன் அவர்களுக்கும் தன் தந்தைக்குச் சொன்ன சமாதா னமே சொன்னுன். அது உண்மைதானென்று நம்பி அவர்கள் அவனுக்கு நேர்ந்த விபத்துக்காக மிகவும் பரிதாபப்பட்டு, மறு படியும் ஒருதடவை யாத்திரைபோய்ப் பொருள் சம்பாதித்து அதைக்கொண்டு இந்த நஷ்டத்தை நிவர்த்திசெய்துக்கொள்ளலாம்; ஒரு தடவை தவறினுலும் ஒரு தடவை சுவாமி நமக்குக் கைகொ டாமற்போவாரா என்றுசொல்லி அவனைப் பலவிதமாய்ச் சமாதா னப்படுத்தி, அவன் சுகமாய்வந்து சேர்ந்ததற்காக ஒருநாள் விசேஷ மாய்ப் பண்டிகையும் கொண்டாடினுர்கள்.

இவர்கள் என்னசெய்தாலும் ஜகந்நாதனுக்கு அந்தத் தீவிலே தான் கண்ட பெருமாட்டியின் நினைவுமாத்திரம் மாறவேயில்லை. அவ் வழகியை நாம் அடைகிற வழியென்ன? அவளைக் கண்டுபிடித்துக் கலியாணம் செய்துகொள்ளாமல் இப்பூமியில் பிழைத்திருந்து பயன் என்ன என்று இப்படியே சிந்தித்து விசாரமுற்றிருந்தான். அவ னுக்குக் களிப்பு உண்டாக்கும்படி அவனுடைய தோழர்கள் என் னமுயன்றும் அவன் முகத்தில் சிறிதும் சந்தோஷக்குறி உண்டா கவில்லை. அவன் இவ்வண்ணம் மனவேதனை கொண்டிருப்பதைக் கண்டு குணசீலன், அதன் தக்ககாரணத்தைக் கண்டுகொள்ளமாட் டாமல், இழந்துபோன பொருளுக்காகவே அப்படி விசாரப்படுகிரு னென்று சாதாரணமாக நினைத்து, குழந்தாய் நீ இதற்காக வருந்து வானேன்? போனதை நினைப்பவன் புத்தியீனனல்லவோ? மேலும், கைசோர்ந்து போனதைப்பார்க்கிலும் எத்தனையோ பங்கு அதிக மான பொருள் நம்மிடத்தில் இருக்கின்றது; அதுவே நமக்குத் தலைக்குமேல் வெள்ளம் என்று சொல்லிப் பலதரம் சமாதானப்ப டுத்த முயன்றுன். என்னசொல்லியும் அவன் கேளாமல், இந்த நஷ் டத்துக்குப் பிரதி பண்ணினுலொழிய என் மனது நிலைப்படாது என்றுன். அதைக்கேட்டுக் குணசீலன் வேறு விதியில்லையென்று, முன் அனுப்பிய கப்பலைப்பார்க்கிலும் எத்தனையோ பங்கு அதிக மான விலைபெற்ற பொருள்கள் அமைந்த மேன்மையான மற்றெரு கப்பலைச் சித்தம்செய்து அதைக்கொண்டு பத்திரமாய்ப் போய் வரும்படி திட்டம்செய்து தேசாந்தரத்துக்கு மகனை அனுப்பினுன்.

இது இரண்டாவது கப்பல்யாத்திரையல்லவா? இந்தக் கப்பல் போனவழியும் முன்கப்பல் போனவழிதான். ஒருநாள் ராத்திரி பிலமோதி என்னும் அந்தக் கொடிய தீவண்டை கப்பல் போய்ச் சேர, அவ்விடத்திலேயே அதை நிறுத்தும்படி ஜகந்நாதன் மாலு மிக்குக் கட்டளையிட்டான். மறுநாள் காலையில் இளவரசி எழுந்து கடலைப்பார்க்க, அங்கே புதிதாய்க் கப்பற்கொடியொன்று ஆடக் கண்டு, அண்டையிலிருந்த தாதியைப்பார்த்து, பெண்ணே, இது

யாருடைய கொடி உனக்குத் தெரிகிறதா என்று கேட்க, அவள்: ஒருவருஷத்துக்குமுன் இளவரசன் ஒருவன் மிகவும் அருமையான அளவற்ற சாமான்களோடு கப்பலைப் பறிகொடுத்துப்போனானே! அவனுடைய கொடிச்சீலைபோலக் காண்கிறதென்றாள். அதைக் கேட்டு ராணியானவள், ஆம், அதுதான். இப்போது இவன் என்னிடத்தில் அதிக ஆசைகொண்டு வந்திருக்கிறான் என்பதற்குச் சந்தேகமுண்டோ? இதுவரையில் இங்கு வந்தவர்களுள் இவன்தவிர இரண்டாந்தரம் திரும்பிவந்தவர் வேறு ஒருவரும் இல்லையே என்றதற்கு, தாதி, என் பெருமாட்டி, நானும் இதுவரையில் பலபேர்களைப் பார்த்திருக்கிறேன்; இப்படிப்பட்ட அழகனை ஒருபோதும் பார்த்ததில்லை; குணக்கடல் என்றால் இவர்க்கே தகும் என்றாள். பின்பு அந்தச் சீமாட்டி தன் உத்தியோகஸ்தர்களை அனுப்பி அவனை அதிக மரியாதையோடு அழைத்துவரச்செய்து அவனை மிகவும் பெருமைப்படுத்தினாள். அவனும் அவளுக்கேற்ற மரியாதைகள் செய்து சந்தோஷமாயிருந்தான்.

அன்று பகற்பொழுதெல்லாம் முன்போலவே விருந்துகளும் விநோதங்களுமாய் வெகு கொண்டாட்டமாகக் கழிக்கப்பட்டதென்றுகூட நாம் இங்கு எடுத்துச்சொல்லவேண்டுமோ? அன்று அந்நகரத்தாரெல்லாம் அவனே தமக்கு அரசனாக வரவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்துத் தம்தம் வீடுகளிலும் பண்டிகை கொண்டாடினார்கள். அப்படியிருக்கப் பொழுதுபோயிற்று; மறுபடியும் முன் நடந்த கதைதான். அவள் அவனைப் படுக்கை அறைக்கு அழைத்துக்கொண்டுபோனாள். கூடவே வேலைக்காரி சிற்றுண்டிகளும் பான வகைகளும் கொண்டுபோனாள். அவனும் அறியாமையால் அதைக் குடித்துவிட்டு மெய்மறந்து தூங்கிப்போனான். மறுநாள் காலையில் கப்பலைப் பிடுங்கிக்கொண்டு அவனைக் குதிரைமேலேற்றி அனுப்பி விட்டார்கள். பின்பு அவன் முன்போலவே ஒருநாள் இராத்திரி தன் தோழன் வீட்டிலேபோய்ச் சேர்ந்தான். அத்தோழன் கண்டு என்ன செய்தியென்று கேட்டதற்கும் அவன் முன் சொன்ன பொய்க்கதையே சொல்லி, என் துரதிர்ஷ்டத்தை நான் என்னென்று சொல்வேன்! பட்டகாலே படும், கெட்டகுடியே கெடும் என்றபடி வருகிற விபத்தெல்லாம் எனக்கே வருகிறதென்றான். அதுகேட்டு அந்தத் தோழன், ஆம், நீ உன் விதியை வெறுத்துக்கொள்ளவேண்டியது நியாயமே. இவ்விடத்து வியாபாரிகளுள் மிகு தனவானாயிருந்த உன் தந்தையை நீ பிச்சாண்டியாக்கிவிட்டாயே. நஷ்டமிருக்கட்டும், இதனால் வந்த மானக்கேடு எவ்வளவு கொடியது என்று சொல்லி அவனோடுகூடத் தானும் விசனப்பட்டான். பின்பு ஜகந்நாதன் வெளிப்படாமல் சில தினங்கள் வரையில் அத்தோழன் வீட்டிலேயே மறைந்துகொண்டிருந்தான். ஆயினும் இன்னது செய்கிறதென்று தோன்றாமல் சிலநாள்வரையில் சிந்தித்துக்கொண்டி

ருந்து கடைசியில் ஒருநாள் கண்ணுங் கண்ணீருமாய்த் தந்தையின் எதிரிலே போய் நின்ருன். தந்தை மகனைப் பார்த்தவுடனே எழுந்து ஓடிவந்து அணைத்து முத்தமிட்டுக்கொண்டு, குழந்தாய் ஏன் அப்பா உனக்கு இப்படிப்பட்ட துர்ப்பாக்கியம் நேரிட்டது! போனதுபோகட்டும், இனி வீண் மனவிசாரப்படாதே; எப்படியாவது நான் உன்னைக் கண்டேனே அதுவே எனக்குப் பரமசந்தோஷம். இன்னும் நம்மிடத்தில் சொற்பப் பொருளிருக்கிறது; அதைக்கொண்டு மெல்லக் காலம் கழிக்கலாம். ஒருபோதும் நாம் கடலை நம்பலாகாது: அது சிலபேர்க்கு வெகு செல்வம் தேடிக்கொடுக்கும்; சில பேருக்குச் சீரைக் குலைத்துவிடும் என்று சொல்லித் தேற்றினுன்.

ஜகந்நாதனேடு கூடிப்போன இரண்டுபேர்மாத்திரம் இந்தத் தடவையும் மிகுந்த லாபத்தோடு திரும்பிவந்தார்கள். தம் தோழனுக்கு நேர்ந்த விபத்தைக்கேட்டு அவர்கள் மிக்க விசனமடைந்து அவனுக்குப் பலவிதமாய்த் தேறுதல் சொல்லி, தங்களுக்கு அந்தத் தடவை கிடைத்த லாபத்தில் அவனும் ஒரு பங்கு எடுத்துக்கொள்ளும்படியாகவும், மறுதடவை அவன் யாத்திரைபோய் அடையும் லாபத்தைத் தாங்கள் அதற்கு ஈடுசெய்துகொள்வதாகவும் சொல்லி வேண்டிக்கொண்டார்கள். ஆயினும் அவை ஒன்றையும் கேளாமல், ஜகந்நாதன் மறுபடியும் அப்பெண்ணாசையினுல் மனநொந்துகொண்டேயிருந்தான். குணசீலன் அதன் காரணம் என்னவென்று கேட்டதற்கு அவன் மறுபடியும் ஏதோ ஒரு பொய்க்கதையே பேசினுன். இந்தத் தடவை தந்தை கொஞ்சம் கண்டிப்பாய் நியாயம் எடுத்துரைத்து நிர்ப்பந்தித்தானுயினும் அது சிறிதும் பயன்படவில்லை. அதனுல் அந்தக் கிழவன் தன் மகனுக்காக மறுபடியும் ஒரு கப்பலைச் சித்தம்செய்யப் புகுந்தான். அதற்காக அவன் தன் வீட்டிலுள்ள முறம் கூடை முதலியவற்றைக்கூட விற்கும்படியாயிற்று. இனி நடந்தகதையைக்கொண்டுதான் ஷேக்ஸ்பியர் வெனிஸ் வர்த்தகன் என்னும் சிறந்த நாடகம் ஒன்று செய்திருக்கிருர். அந்நாடகத்தில் ஜகந்நாதனுக்கு பஸானியோ எனவும், குணசீலனுக்கு அந்தோனியோ எனவும் பெயர் வழங்குகின்றன. தன் பிள்ளையைப் பிரயாணம் பண்ணி அனுப்புவதற்காகக் குணசீலன் ஒரு யூதனிடத்தில் பதினாயிரம் பூவராகன் கடன்கேட்க, அவன், வருகிற ஜூன்மீத்தில் ஸெண்டு ஜான் பண்டிகைக்குள்ளாக அந்தப் பணத்தைக் கொடுத்துவிடவேண்டியதென்றும், அப்படிக் கொடாதபக்ஷத்தில், கடன்வாங்கினவனுடைய மார்பிலென்றல்ல, அவன் முதுகில் தனக்கு இஷ்டமானவிடத்திலே கடன்கொடுத்தவன் பத்துப் பலம் மாமிசம் அறுத்து எடுத்துக்கொள்ளவேண்டுமென்றும் இப்படி ஒரு கடன்பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டு கடன் கொடுத்தான். இந்தப் பணத்தைக்கொண்டு அமைத்த மூன்ருங்கப்பல், முன்னிரண்டு கப்பல்களைப்பார்க்கிலும் மிகவும் மேன்மை பெற்றதாயிருந்தது. அக்கப்

பல் பிரயாணப்படுகிற தருணத்தில் குணசீலன் தன் மகனண்டை வந்து, என் குலக்கொழுந்தே, உன்னை அனுப்பிவிட்டு நான்மாத்திரம் இங்கே நிற்கவேண்டிய அவசியமிருக்கின்றது. அதனால் இப்போது நான் உன்னை முக்கியமாய் ஒன்று வேண்டிக்கொள்கிறேன். தெய்வச்செயலால் இந்தத் தடவையும் உனக்கு ஏதாவது சங்கடம் நேரிட்டாலும், அதனால் ஏங்கி எங்கும் ஒளித்திராதே. நான் இறப்பதற்குமுன் உன் முகத்தைப் பார்க்கும்படி உடனே என்னிடம் வந்துசேர். உன் முகத்தைப் பாராவிடின் என் பிராணன்கூட நிம்மதியாய்ப் போகாதென்றான். அதற்கு ஜகந்நாதன், இந்தத் தடவை அப்படி ஒன்றும் விபரீதம் நேரிடாது; அனுகூலமாகவே திரும்பி வருவேன் என்று சொல்லிவிட்டுக் கப்பலேறினான். இந்த மூன்றுந் தடவையில் ஜகந்நாதனுடைய தோழர்கள் இருவரும் அவன் கப்பல் எங்கே வழிதப்புகிறதோவென்று அதன்மேலேயே கண்ணுய்ப் பார்த்துக்கொண்டுபோனார்கள். அவனும் அவர்களைவிட்டுத் தான் விலகுவதற்குத் தருணம் எப்போ வாய்க்கப்போகிறதென்று அதையே நுட்பமாய்த் தேடிக்கொண்டிருந்தான். ஒருநாள் அர்த்தராத்திரியில் காரிருளிலே அவனுக்கு அத்தருணம் வாய்த்தது. உடனே அவனுடைய கப்பல் மறைந்துபோய்விடக் கண்டு இதென்ன மாயமென்று மற்றவர்கள் மிகவும் ஆச்சரியம் அடைந்தார்கள். ஆயினும் அவனுக்கு ஏதோ ஒரு மிகுந்த அபாயம் சம்பவித்துவிட்டதென்றே நினைத்து விசனமடைந்து, தாங்கள் எவ்வளவு கண்காணித்து வந்தும் அது தமக்குத் தெரியாமற்போனதற்காக மிகவும் வியந்துகொண்டே தாம் போகவேண்டியவிடத்துக்குப் போனார்கள்.

(இன்னும் வரும்.)

புதனைப்பற்றிய விசேஷங்களும் புதக்கிரஸ்த சூரியக்கிரகணமும்.

ஆகாயத்தில் இப்போது நமக்குத் தெரிந்திருக்கிற கிரகங்கள் எல்லாவற்றுள்ளும் புதன் என்னும் கிரகமானது சூரியனுக்கு மிகச் சமீபத்திலுள்ளதும் கண்ணால் எளிதில் பார்ப்பதற்கு அசாத்தியமானதுமாம். புதக்கிரகம் ஏறக்குறைய எப்போதும் சூரியனுடைய சமீபத்திலேயே இருந்து அவனுடைய கிரணங்களில் மூழ்கிக் கிடப்பதோடுகூட அதன் உருவத்தின் பரிமாணமும் மிகச் சிறிதாயிருப்பதால் அதை எளிதில் காண்பது எவர்க்கும் அசாத்தியமாயே இருக்கின்றது.

மிகச் சிறிய பரிமாணமுள்ளதும் சூரியனுடைய கிரணங்களில் மூழ்கிக்கிடப்பதுமான இந்த புதக்கிரகத்தைக் கண்டுபிடிக்கப் பூர்வகாலத்துச் சோதிடசாஸ்திரிகள் பட்டபாடு இவ்வளவவ்வளவா

யிராது. வெள்ளி, வியாழம், செவ்வாய், சனி இந்தக் கிரகங்களைக் கண்டுபிடித்தபிறகு புதனைக் கண்டுபிடிக்க எவ்வளவோ பிரயாசப்பட்டிருப்பார்கள். ஆயினும் அதைக் கண்டுபிடித்த விதத்தைக் குறித்து ஒரு செய்தியும் தெரியவில்லை; மற்றக் கிரகங்களோடுகூடவே இதையும் கண்டுபிடித்தார்களோ, அல்லது அதற்குப்பிறகு நெடுநாள் கழித்தே கண்டுபிடித்தார்களோ அதைப்பற்றி ஒன்றும் தெரியாது. வெள்ளியையும் வியாழனையும் வெகுகாலத்துக்குமுன்னமே மிக்க விசேஷமாகப் பார்த்துத் தெரிந்துகொண்டிருப்பார்கள். வானத்தில் தோன்றுகிற பல நக்ஷத்திரங்களுள்ளும் வெள்ளியும் வியாழனும் மிகச் சிறந்த பளபளப்பும் ஆகாயத்தில் ஒரே அளவான சஞ்சாரமுமுடையவையாயிருப்பதனால், இதனாலேயே சிறுவர்களும் அவற்றைக் குறிப்பாய்க் கண்டுகொள்ளக் கூடுமல்லவா? அவ்வண்ணமே செவ்வாய் சனிகளையும் கண்டுகொள்ளலாம். இவைதவிரத் தெளிவாய்க் கண்ணால் காணத்தக்க சஞ்சாரமுள்ள கிரகம் ஆகாயத்தில் வேறொன்றுமில்லை. ஆயினும் இவற்றைப் போலன்றிக் கொஞ்சம் பிரயாசப்பட்டு அதேதொழிலாய்ப் பார்த்தால் புதக்கிரகத்தையும் கண்டறியக்கூடும்.

நக்ஷத்திரங்களைத் தெளிவாய்க் காண்பதற்கு ஏற்றகாலம் நன்றாயிருண்ட ராத்திரியேயானாலும் அக்காலத்தில் புதக்கிரகத்தைக் காணக்கூடாது; அந்திப்பொழுதே அதற்கு ஏற்றகாலம். ஏனெனில் அது சூரியனை அடுத்தே திரிகிற கிரகமாதலால் சூரியனைவிட்டு நெடுந்தூரம்போகாமல் சுக்கிரனைப்போலக் காலையில் சூரியோதயத்துக்குச் சற்றுமுன் கீழ்த்திசையிலாவது, மாலையில் சூரியாஸ்தமயமானபின்பு சிறிதுநேரம்வரையில் மேற்றிசையிலாவது காணப்படும். ஆதலால் ஒருவன் அடிவானம்வரையில் ஆகாயக்காட்சிக்கு யாதொரு தடையுமில்லாத ஒரு வெட்டவெளியிலேபோய் நின்று நாள்தோறும் காலை மாலைகளில் தப்பாமல் வானத்தைப் பார்த்துக்கொண்டு வருவானானால் அப்போது சில தினங்களுக்குப்பிறகு அதுவரையில் ஒருநாளும் காணப்படாத புதுக்கிரகம் ஒன்று தோன்றும். அதைக் கண்டு களிப்படைந்தவனாய் அதை மறுபடியும் பார்க்கும்பொருட்டு மறுநாள் அந்தவேளை எப்போது வரப்போகிறதென்று அதிக ஆவலோடு காத்திருப்பானாயின், அன்றையதினமும் அதேஸ்தானத்தில் அந்த நக்ஷத்திரம் தோன்றுவதைப் பார்த்து அவன் சந்தேகந்தெளிந்து அதிக ஆநந்தமடையும்படியாகும். புதக்கிரகம் இன்னதென்று கண்டுபிடித்தவர் ஆதியில் இவ்வண்ணமாகத்தான் கண்டுபிடித்திருக்கவேண்டும். பின்பு பதினேழாவது நூற்றாண்டில் பூதக்கண்ணாடிகளும் தூரதிருஷ்டிக்கண்ணாடிகளும் கண்டுபிடிக்கப்படுகிறவரையில் கிரகங்களைப்பற்றி அதற்குமேல் யாதொரு சோதனையும் செய்யப்படவில்லை.

புதக்கிரகத்தின் வாஸ்தவமான பரிமாணம் இவ்வளவென்பது

இக்காலத்திய நூதனமான கருவிகளாலேயே கண்டறியப்பட்டதாயினும், அது மிகவும் சிறிதான கிரகமென்பதுமாத்திரம் முன்னமே அறியப்பட்டதுதான்.

சூரியனுக்கும் புதனுக்குமுள்ள தூரம் ஏறக்குறைய மூன்றரைக்கோடி மைல். 88 நாளில் அது சூரியனை ஒருதரம் சுற்றி ஓடுகின்றது. அந்தக் கிரகத்தின் பரிமாணம்மாத்திரம் எப்போதும் நமது கண்ணுக்கு ஒரே தன்மையாகத் தோற்றுவதில்லை; அதன் நிலைமைக்குத் தக்கபடி நமக்குப் பலவிதமாய்த் தோன்றும். அது நமக்கு அதிக சமீபமாய்ச் சூரியனுக்கும் பூமிக்கும் மத்தியில் வரும்போது அம்மண்டலத்தின் பரிமாணம் மிகப் பெரியதாகவும் சூரியனுக்குமேலே போம்போது மிகச் சிறியதாகவும் காணப்படும். புதக்கிரகம் தன்னுடைய கக்ஷியில் சூரியனைவிட்டு அதிக தூரமாய்ப்போகிற காலத்திலேதான் காலையிலும் மாலையிலும் சூரியனுக்கு முன்னும் பின்னுமாக நமது கண்ணுக்குப் புலப்படும். அப்படிப்பட்ட காலத்திலேயும் அது சூரியனைவிட்டு நெடுந்தூரம் விலகிஇராது.

புதமண்டலம் மிகவும் சிறியதாயும் சூரியனுடைய காந்தியில் மறைந்ததாயும் இருப்பதுபற்றி அதன் இயற்கையை நன்றாய்ப் பரீக்ஷித்தறியக்கூடவில்லையாயினும் ஒவ்வொரு தருணங்களில் பரிசோதனை செய்து அதில் சில களங்கங்கள் இருக்கின்றனவெனக் கண்டறிந்திருக்கிறார்கள். இந்த நூற்றாண்டின் முதலிலே இரண்டொரு சாஸ்திரிகள் புதமண்டலத்தைப் பலதடவை பரீக்ஷைசெய்துபார்த்து அதன் மேற்புறமெல்லாம் பருவதப்பிராந்தமாயிருக்கின்றதாகக் கண்டார்கள். மேலும் 24-மணி, 5-நிமிஷத்தில் தன்னிருகில் தானே ஒருதரம் சுற்றுகிறதென்றும் கண்டறியலாயிற்று. இக்காலத்தில் மிகத் திருந்திய கண்ணாடிகளைக்கொண்டு நுட்பமாய்ப் பரிசோதனைசெய்யத் துவக்கினாலும், பூர்வகாலத்தில் கண்டறிந்த இவ்விஷயங்களே சரியானவையெனத் தெரியவருகின்றது. இனி இந்தக் கிரகத்தைப் பற்றிப் பின்னும் அதிகமான நுட்பங்கள் கண்டறியலாகுமென்று எதிர்பார்த்திருக்கிறோம்.

புதன் வெள்ளி இவ்விரண்டு கிரகங்களும் பூமிக்கும் சூரியனுக்கும் மத்தியில் ஓடுகின்றவையாதலால் அவற்றினுடைய வடிவம் ஏறக்குறைய நமது சந்திரனுடைய வடிவம்போலவே இருக்கின்றன. இந்தக் கிரகங்கள் இப்பூமியின் நிலைமைக்குத் தக்கபடி பல காலங்களில் பலவிதமாய்க் காணப்படுவதே இதற்கு அத்தாட்சியாம். சூரியனுடைய ஒளி பிரதிபலிப்பதனாலேயே கிரகங்களுக்கெல்லாம் பிரகாசமுண்டாயிருக்கின்றதென்பது எல்லோர்க்கும் பிரசித்தமாய்த் தெரிந்தவிஷயமேயல்லவா? ஆதலால் சந்திரனைப் போலவே சுக்கிரனுகட்டும் புதனுகட்டும் பூமிக்கும் சூரியனுக்கும் மத்தியில் சரியாக வரும்போது அவற்றின்மேல் சூரியகாந்தி படு

கிற பக்கம் நமக்கு நேராயிராமல் இருண்ட பாகமே நமக்கு நேராகத் தோன்றுவதனுல், அமாவாசைச் சந்திரன்போல அப்போது அவை நமது கண்ணுக்குப் புலப்படாவாம். சுக்கிரன் அப்படி வருகிற காலத்தைத்தான் சுக்கிராஸ்தமயம் என்று சொல்வது. பின்பு அது அவ்விடம்விட்டுக் கொஞ்சம் கொஞ்சமாய் அப்புறம் ஒதுங்கும் போது பிறைச் சந்திரன்போலக் காணப்பட்டு வரவர அகன்று கடைசியில் சூரியனுக்கு எதிர்ப்புறத்தில் நேராகப் போம்போது பூர்ணிமைச் சந்திரன்போல முழுவட்டமாக இப்பூமிக்கு மாத்திரமேயன்றி சூரியமண்டலத்துக்கும் தோன்றும். இந்தக் கிரகங்கள் நமக்கு அதிக சமீபமாய்ச் சூரியனுக்கும் பூமிக்கும் மத்தியில் வரும்போது மிகப் பெரிய பரிமாணமுள்ளவையாகவும், சூரியனுக்குமேலே அதிக தூரத்தில் போம்போது மிகச் சிறியவையாகவும் தோன்றும்.

இவ்வண்ணம் ஓடுகின்ற இந்த நக்ஷத்திரங்கள் பூமிக்கும் சூரியனுக்கும் மத்தியில் வரும்போது சிறிதும் பிசகாமல் சூரியனுக்கு நேராக வந்துநிற்பது மிகவும் அருமை. அப்படி வரும்போது அவை சூரியமண்டலத்து மத்தியில் ஒரு சிறுபுள்ளிபோலத் தோன்றும். சுக்கிரன் அப்படி வரும்போது சுக்கிரக்கிரஸ்த சூரியக்கிரகணமென்றும், புதன் வரும்போது புதக்கிரஸ்த சூரியக்கிரகணமென்றும் சொல்வார்கள். சில வருஷங்களுக்குமுன்னே சுக்கிரனுல் அப்படிப்பட்ட கிரகணம் ஒன்று உண்டானதை அநேகர் ஆவலோடு பார்த்திருக்கலாமல்லவா? இப்படி புதனுல் சூரியனுக்கு உண்டாகும் கிரகணத்தை முதல்முதல் 1631-ஆு நவம்பர்மீ 7உ தான் பார்த்தறிந்ததாகத் தெரியவருகின்றது. அதற்குப் பின்பு வெகுவாய்ச் சமயம் வாய்த்தபோதெல்லாம் அதை ஆவலோடு எதிர்பார்த்திருந்து அநேகர் கண்டு களித்துவந்தார்கள். இந்தக் கிரகணம் சராசரி நான்கு மணி காலம் நீடித்திருக்கும். சில சமயங்களில் குறைந்தது ஒரு மணி காலத்தில் விலகிப்போனதுமுண்டு; ஏழுமணி காலம்வரையில் நீடித்திருப்பதுமுண்டு. சென்ற 1878-ஆு மேமீ 6உயிலும் 1881-ஆு நவம்பர்மீ 8உயிலும் புதக்கிரஸ்த சூரியக்கிரகணமுண்டானது அநேகர்க்குத் தெரிந்திருக்கலாம். இந்தக் கிரகணம் தப்பாமல் மேமீ நவம்பர்மீ இவ்விரண்டனுள் ஒன்றிலேதான் வரும். சுக்கிரனுல் வரும் கிரகணமோ ஜூன்மீ டிசம்பர்மீ இவ்விரண்டனுள் ஒன்றில் உண்டாகும். ஆயின் சுக்கிரக்கிரகணம் புதக்கிரகணத்தைப் போலச் சாதாரணமாய் அடிக்கடி உண்டாவதன்று; மிகவும் அருமையாய் ஒவ்வொரு தருணத்தில் உண்டாகும். மேலும் அக்காலத்தில் சோதிடசாஸ்திரத்தைப்பற்றிய அருமையான நுட்பங்கள் பல கண்டு பிடிக்கப்படுமாதலால் அது மிகவும் விசேஷமாகக் கொண்டாடத்தக்கதாம்.

புதனுல் கிரகணம் உண்டாகும் காலங்களில் சில அதிசயமான சங்கதிகள் காணப்பட்டிருக்கின்றன. அவையாவன, புதன் சூரியமண்ட

லத்து நடுவே போம்போது பளபளப்பான இரண்டொரு புள்ளிகள் புதமண்டலத்தில் காணப்படுகின்றன. ஒவ்வொரு சமயங்களில் புத மண்டலத்தைச் சுற்றி மிகப் பிரகாசமான ஜோதிமண்டலமொன்று சூழ்ந்துகொண்டிருப்பதாகக் காணப்படுகின்றது. அது புதக்கிரகத்தைச் சூழ்ந்துகொண்டிருக்கிற வாயுமண்டலமெனச் சில வானசாஸ்திரிகள் சொல்லுகின்றனர். ஆயினும் அதைப்பற்றி நிர்ணயமான அபிப்பிராயமொன்றும் ஏற்படவில்லை. அது சூரியமண்டலத்தின் ஜோதியாயிருந்தாலும் இருக்கலாமென்று சிலர் ஊகிக்கிறார்கள்.

புதக்கிரகமானது சிலகாலங்களிலே மாத்திரம் அருமையாய்க் காணத்தக்கதென்றாலும், அதேகாரியமாய் முயன்று பார்ப்பவனுக்கு அது சாதாரணமாய் எக்காலத்திலும் சூக்ஷ்மமாய்க் காணப்படும். புதனிருக்குமிடம் இன்னதெனப் பஞ்சாங்கத்தைப் பார்த்து அறிந்துகொண்டு அந்த இடத்திலேயே குறிப்பாய் இரண்டொரு நாள் பார்த்துவந்தால் சுலபமாய்க் காணலாம். முதலில் ஒருதரம் கண்ணுக்குத் தோன்றிவிடுமானால் அப்புறம் அதைப் பார்ப்பது கடினமன்று. சில சமயங்களில் அடிவானத்துக்குச் சற்றுமேலே மற்றச் சாதாரண நக்ஷத்திரங்களைப்பார்க்கிலும் அதிக சோதியாய் வெளேலென்று புதக்கிரகம் வெறுங்கண்ணுக்குக்கூடத் தோன்றும். சென்ற மே மாதத்தில் புதன் மேற்குத்திக்கிலே வெறுங்கண்ணுக்குக்கூடத் தெளிவாகக் காணப்பட்டது.

உயர்ந்தவகுப்புக் கல்வி.

சென்ற ஆறுமாதகாலமாய் வித்தியாவிஷயத்தைப்பற்றிய சகலமான ஏற்பாடுகளையும், அவைகளால் விளைந்த பயன்களையும் ஆய்ந்துபார்த்தறிந்துகொள்ளவேண்டுமென்ற கருத்துற்று துரைத்தனத்தார் அதற்குத் தக்க அனுபவமுள்ள யோக்கியர்களைத் தேர்ந்தெடுத்து ஒரு சங்கமாகச் சேர்த்து, இந்தியாவெங்கும்போய்ப் பார்த்து விசாரணைசெய்து அங்கங்கே உள்ளவர்களோடு கலந்து பேசிக்கொண்டதன்பின்னர் தங்கள் அபிப்பிராயத்தை அறிக்கைசெய்ய வேண்டுமென்று அவர்களைக் கேட்டிருக்கிற சங்கதியைப் பலர் கேள்விப்பட்டிருக்கலாம். அச்சங்கத்தார் இப்பொழுது அவ்வுத்திரவின்படியே எங்கும் போய்ச் சுற்றிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் செய்யும் அறிக்கை வெளிப்பட்டதின்பின்புதான் துரைத்தனத்தாருடைய அபிப்பிராயம் இன்னதென்று விளங்கும். உயர்ந்தவகுப்புக் கல்விச்சாலைகளை வைத்து அபிவிருத்திசெய்துகொண்டு வருவதில் துரைத்தனத்தார் இனிமேற்படத் தலையிட்டுக்கொள்வது அவசியமல்லவென்றும், சாதாரணமாய்ப் பிரஜைகளுக்கு வேண்டியதாகிய கீழ்வகுப்புப் படிப்பை இப்பொழுதிருப்

பதினும் அதிகமாகப் பரவச்செய்யவேண்டுமென்றும் சிலர் வாதிக்க, இதை விசாரித்துத்தான் தீர்க்கவேண்டியதென்று அதற்காகவே மேற்படிச் சங்கம் ஏற்பட்டிருக்கிறதாகச் சொல்லலாம். இச்சமயத்தில் வித்தியாபாரங்கதாராகிய திருவனந்தபுரத்து மகாராஜா அவர்கள் தம்முடைய கருத்தை வெளியிட விரும்பி இதுவிஷயத்தைச் சுட்டிச் சென்னைக் கவர்னர் துரையவர்களுக்குச் சென்றமாதம் ஒரு நிருபம் எழுதியனுப்பினூர்கள். அதன் இறுதியில் அவர் தொகுத்துரைத்திருப்பதைமாத்திரம் இதனடியில் மொழிபெயர்த்தெழுதுவோம்:—

1. உயர்வகுப்புக் கல்வியைத் துரைத்தனத்தார் கைசோரவிட நினைத்திருப்பதாகத் தேசமெங்கும் ஒருவதந்தி உண்டாயிருக்கின்றது.

2. இவ்வாறு ஜனங்கள் கொண்டிருக்கும் சந்தேகமானது, துரைத்தனத்தாரின் வாக்கினின்று வெளிப்படையாய் அப்படியல்லவென்று மறுமொழி பிறக்குமளவும் கெடாது தொடர்ந்துகொண்டிருக்கும்.

3. உயர்ந்தவகுப்புக் கல்விக்கும், தாழ்ந்தவகுப்புக் கல்விக்கும் ஏதோ பகையிருப்பதுபோல அவற்றின் ஏற்றத்தாழ்வைப்பற்றிச் சென்ற நாற்பதுவருஷகாலமாய் விவாதம் நடந்துகொண்டு வருவதை நினைக்கத் துயர் உண்டாகிறது.

4. சமுதாயமாய்ப் பார்த்தால் எந்தத் துரைத்தனத்தாரும் தங்கீழ் வாழும் குடிகளின் கல்வியை அபிவிர்த்திசெய்ய உடன்படவேண்டுவதில்லைதான்.

5. ஆயினும், அனுபவசித்தமாய்த் தெரிந்திருக்கிறபடி, பிரயோஜனம், பூததயை, நாகரீகவிருத்தி முதலிய காரணங்களைப்பற்றி வித்தியாவிருத்தி அரசனுடைய கடமையென்று கொண்டால், அப்போது பலருக்குப் பயன்படுவதாகிய தாழ்ந்த கல்வியைமட்டும் தலைப்பொறுப்பாகக்கொண்டு, மற்றவர்க்கு உபயோகமான உயர்வகுப்புக் கல்வியைக் கடைக்கணிப்பது நீதியன்றே.

6. இங்கிலாந்து தேசத்தில் உயர்வகுப்புக் கல்வியைப் பயிற்றுவிப்பதில் சற்றேறக்குறைய அதன் வரும்படியைக்கொண்டே கட்டிவருகிறதென்பது உண்மையானாலும், அத்தேசத்திற்கும் இந்நாட்டிற்கும் எவ்வளவோ வேற்றுமை உண்டாதலால், இதுவிஷயத்தில் அதற்கும் இதற்கும் ஒப்பிடுவது நியாயமன்று.

7. உயர்வகுப்புக் கல்வியானது துரைத்தனத்தாரால் கைநெகிழவிடப்படுமாயின் அதை ஆதரவுசெய்து பாதுகாக்கத்தக்கவர் இந்நாட்டில் இன்னும் உண்டாகவில்லை.

8. இந்த வித்தியாபிவிருத்தியைப் பாதிரிமார்கள் கையில் ஒப்புவிப்பது ஆக்ஷேபத்திற்கிடமானது:—1-வது, கவரன்மெண்டார் தங்களுடைய மதத்தை ஜனங்களுக்குப் போதிக்கக் கருதி இம்மாதிரி

செய்கிறார்களென்று எங்கும் அவநம்பிக்கை பிறக்கும். 2-வது. உயர்வகுப்பினராகிய இந்துக்களும், இந்துக்களல்லாத மற்றவர்களும் அப்பாடசாலைகளை அண்டார்கள் என்பது நிச்சயம். 3-வது. இப்பொழுதிருக்கிற துரைத்தன சர்வகலாசாலைகள் எடுபட்டுப்போமாயின், பாதிரிமார்கள் உயர்வகுப்புக் கல்வியை இப்பொழுதிருக்கிற சீரின்படியே வைத்திருப்பார்களென்பதற்கு உத்தரவாதமொன்றும் காணப்படவில்லை.

9. கவரன்மெண்டு வித்தியாசாலைகளில் மதசம்பந்தமான போதிப்பு வேண்டியவளவுக்குக் கிடைக்கவில்லையென்று பாதிரிமார் துயரப்படுகையால், அந்தக் குறைவை நிவிர்த்திசெய்துகொள்ளுமாறு துரைத்தனத்தார் முயல்வது நியாயமன்று.

10. உயர்ந்த கல்விப்பயிற்சியுள்ள இந்துக்கள் நிரீசுவரவாதியாகிறார்களென்று சொல்வது பொய். கல்விகற்றலானது கெட்ட அபிப்பிராயங்களைக் களைந்துவிடுவதுமன்றி, உண்மைநெறியைத் தேட ஊக்கமுண்டாக்குகிறது. உண்மைநெறியை அறிய விரும்புவோர்க்கு ஈசுவரஞானம் வேண்டியமட்டும் கிடைப்பதெளிதேயன்றி வேறல்ல. கேட்பாருண்டானால் சொல்வாராயில்லை?

11. கீழ்வகுப்புக் கல்வியானது இன்னும் அதிகமாக அபிவிருத்தி செய்யப்படவேண்டுமென்பது மெய்தான். லோகல்பண்டினாலும், சர்க்கார் திரவியசகாயத்தினாலும் அதற்குப் பல வருடங்களாய் வேண்டியமட்டும் உதவி கிடைத்திருக்கின்றது. இன்னுங்கூட அதிகப்படுத்த இடமுண்டு; இதனோடுகூட, துரைத்தனத்தாரும், சீருஞ்செட்டுமாயிருந்து அதனால் கிடைக்கின்ற ஊதியத்தில் ஒரு பங்கு கொடுத்து பிரதமசிக்ஷாபாடசாலைகளைப் பெருகச்செய்வது முறையே.

12. இத்தேசத்திலுள்ள கனவான்களுடைய பிள்ளைகளுக்குக் கல்வி பயிற்றுவிக்கும்படி தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டால், அப்படிக் கல்விபயின்று தேர்ந்த அந்தப் பிரபுக்கள் தமக்குக் கீழ்ப்பட்டவர்களுக்குக் கல்வியறிவைப் புகட்டலாகுமென்று எதிர்பார்க்கலாம்; இதுவிஷயத்தில் கவரன்மெண்டார் செய்திருப்பது போதாது; முக்கியமாய்ச் சென்னைராஜதானியில் இதுவிஷயத்தில் ஒரு பிரயத்தினமும் செய்யப்படவில்லை.

13. துரைத்தன வித்தியாசாலைகளில் உயர்ந்த வகுப்புக்கல்வியைக் கற்றுக்கொடுப்பதினால் ஒன்றும் பிரயோசனப்படவில்லையென்று சொல்வதானது முற்றும் அவதூறே. பிரிடிஷ் இந்தியாவிலும், அதற்கு வெளியிலுள்ள சுதேசராஜாங்கத்திலும் நிறைகல்வி கற்ற விவேகிகள் மேலான உத்தியோகங்களில் அமர்ந்து துரைத்தனத்தை நடத்திவருகிறார்கள்; நன்றாய்ப் படித்த ஒவ்வொரு இந்துவும் அவன் இருக்கும் இடத்தில் ஜனங்களுடைய சுகத்தையே நாடி அவர்களைச் சீர்ப்படுத்த முயல்கிறான்.

14. இப்பொழுது இருக்கிறபடி உயர்ந்தவகுப்புக் கல்வியானது அதனைப் பெறுகிறவர்களுக்கு விவேக விருத்திமுதலான நன்மையைப் பயக்குவதுமன்றி இன்னும் மென்மேலும் பயன்தருமென்பது உண்மையே; ஆனால் கவரன்மெண்டாருடைய சம்மதமற்றுப்போனால் அந்த நன்மைகளைப் பெறுவது எப்படி?

15. உயர்வகுப்புக் கல்வியைக் கற்ற சுதேசிகள் கீழ்வகுப்புக் கல்விக்கு ஒருநாளும் இடையூருக மாட்டார்களென்றும், அதற்கு வேண்டியபடி துணைநிற்கிறார்களென்றும், இதுவிஷயங்களை நன்ருய் அறிந்த வல்லவர்களால் கண்கூடாக் காட்டப்பட்டிருக்கிறது.

16. உயர்வகுப்புக் கல்விப்பயிற்சி மென்மேலும் பெருகுவதனால், துரைத்தனத்துக்கு ஏதோ பிரமாதம் வந்துவிடுமென்று சிலர் வீண்வாதஞ்செய்து மலைப்பது மிகவும் பரிகாசத்திற்கிடமாகுமேயன்றி, எதிர் நியாயம் எடுத்துரைக்கத்தக்க விஷயமன்று.

17. இத்தன்மையான கீழ்வகுப்புப் படிப்பை அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற காரணத்தினால் உயர்வகுப்பு வித்தைக்குப் பிடிக்கிற செலவை மட்டுப்படுத்தப்பார்க்கிறது நியாயமாகாது; கோணிப்பையைப் பெரிதாக்க நினைத்து நுனியைத் தறித்து அடியிற் றைத்தால் நீளுமோ? உயர்வகுப்புக் கல்விக்காகப் பிடிக்கும் செலவுமாத்திரம் இந்த ராஜ்யத்திற்குண்டாகிற பலவகையான வரவு செலவுகளை உற்றுப்பார்க்கையில் எத்தனையோ சொற்பம்: இதை மிகுத்துவது எதற்காகும்? மயிர்சுட்டுக் கரியாகுமா! வித்தியாவிஷயத்தைப்பற்றி 1854-ஆ உண்டான உத்தரவில், நாளாவட்டத்தில் பாடசாலைகளைக் குடிகளே பாதுகாத்துக்கொள்ளவேண்டும் என்று சொன்ன கருத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்ற காலம் இன்னும் வரவில்லை என்பது வாஸ்தவம்.

தாழ்ந்தவகுப்புக் கல்விக்காக உயர்ந்தவகுப்புக் கல்வியைத் துரைத்தனத்தார் கைவிடவேண்டுமென்று ஓலமிடுகிறவர்கள் மேற்சொன்ன ஆக்ஷேபங்களுக்கு ஏற்ற சமாதானம் என்ன சொல்வார்களோ என்று பலர் எதிர்பார்த்திருக்கிறார்கள்.

புதிய சில்லரைக் கடன்பத்திரம்.

இந்திய துரைத்தனத்தார் சிலகாலமாய்த் தமக்கு இருக்கும் ஐரோப்பாதேசத்து நாணயக் கடன்களைக் குறைக்கும்பொருட்டும், இத்தேசத்து ஜனங்கள் தாங்கள் மிகுத்திவைக்கக்கூடிய சொற்ப திரவியத்தைப் பூஷணங்களாகவாகிலும் அப்படியே திரவியமாகவாகிலும் கையில் சேர்த்துவைத்துக்கொண்டிருப்பதைப் பார்க்கிலும்

தருந்த ஈடுகளின்மேல் கடன்கொடுத்துச் சொற்ப வரும்படியுள்ள வர்களும் லாபம் அடையும்பொருட்டும் ஒருமார்க்கம் தேடவேண்டு மென்று யோசித்துக்கொண்டேயிருந்து கடைசியில், தாங்கள் புதி தாய்ச் சில்லறைக் கடன்பத்திரங்கள் பிறப்பித்து அந்த ஈட்டின்மேல் ஜனங்களிடத்தில் கடன்வாங்கிக்கொண்டு வட்டிகொடுத்து வருகிற தென்று தீர்மானித்து, அதைப்பற்றிப் பற்பல ஜில்லாக்களிலும் உள்ள உயர்ந்த உத்தியோகஸ்தர்களை அபிப்பிராயம் கேட்டதற்கு, குடிகளே ஒருவர்க்கொருவர் கொடுக்கல்வாங்கல் செய்துகொண்டு அதிகலாபம் தேடும்படியாயிருக்க துரைத்தனத்தார் சொற்பவட்டிக் குப் பிறப்பிக்கும் இந்தப் புதிய கடன்பத்திரங்களால் அவர்களுக்கு என்ன பயன் என்று சிலர் ஆக்ஷேபித்தார்களாயினும், அதனால் அநேக நன்மையுண்டென்று பலர் அதற்கு உபபலமாய்ப் பேசின தால், அதன்படியே இப்போது துரைத்தனத்தார் ஸ்டாக்நோட்சு என்னப்பட்ட கடன் சீட்டுகள் பிறப்பிக்கத் தீர்மானித்திருக்கி றார்கள். அதைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டிய முக்கிய விஷ யங்களாவன:

இந்தச் சீட்டுகள் இதுவரையில் ஏற்பட்டிருக்கும் துரைத்தனக் கடன்பத்திரங்களைப்போலப் பெருத்த தொகைகளுக்கல்ல; $12\frac{1}{2}$ ரூபாய், 25 ரூபாய், 50 ரூபாய், 100 ரூபாய் ஆகிய இந்த நான்கு விதமான சில்லறைத் தொகைகளுக்கேயாம்.

அந்தந்தச் சீட்டு பெறுமான விலைக்கே அதது விற்கப்படும். அந்தத் தொகைக்கு வருஷத்துக்கு நூற்றுக்கு 4 வீதம் வட்டி கிடைக்கும்.

இண்டார்சு பண்ணுமலும் வேறு எந்தவிதமான ஒழுங்கையும் அநுசரியாமலும் இச்சீட்டுகளைக் கிரயவிக்கிரயம் செய்துகொள்ள லாம். ஆயின் வாங்கிக்கொண்டவன் தான் வாங்கின தேதிவரை யில் அதன் வட்டியை விற்றவனுக்குச் செலுத்தினதாகவே கொள்ள லாகும். பிரதி சீட்டுக்கும் மாதாந்த வட்டித்தொகையானது பிர ஜைகளுக்கு அநுகூலமாயும் பத்திரமாயும் இருக்கும்பொருட்டு அதன் முகப்பிலேயே குறிக்கப்பட்டிருக்கும்.

குடித்தனக்காரர்கள் தங்களிடத்திலுள்ள ஸ்டாக்கு நோட்டுக ளைத் தாங்கள் நிலத்தீர்வை செலுத்தவேண்டிய சர்க்கார் கஜானாவில் கட்டிவைத்தால் அந்தத் தொகைக்குச் சேருகிற வட்டித்தொகையை அவர்களுடைய தீர்வை பாக்கிக்குச் செல்லுவைத்துக்கொள்ளலா கும். வேண்டும்போது அந்தக் குடித்தனக்காரர்கள் அந்த நோட்டு களைப் பெற்றுக்கொண்டு தங்கள் கணக்கைத் தீர்மானம்செய்து கொள்ளலாம்.

ஸ்டாக்கு நோட்டுகள் ஒவ்வொரு சர்க்கிலுக்கும் உரியவையா கப் பிறப்பிக்கப்படும். அந்த நோட்டுகளிலேயே அவற்றின் பெறு மானமும் மாதாந்தம் கொடுக்கவேண்டிய அதன் வட்டித் தொகை

யும், இப்போது வழங்குகிற கரன்ஸிநோட்டுகளில் கண்டிருப்பது போல, அவ்வவ்விடத்துத் தேசபாஷைகளால் குறிக்கப்பட்டிருக்கும்.

அங்கங்குள்ள சகலமான கஜாநுக்களிலும் வேண்டியவர்கள் ஸ்டாக்கு நோட்டுகளைப் பெற்றுக்கொள்ளலாம். ஸ்டாம்புவண்டர்களும் இன்னும் உத்தரவுபெற்ற மற்றவர்களும் விற்கும்படியான ஏற்பாடுகள் இனிமேல் செய்யலாகும். வேண்டியவர்கள் $12\frac{1}{2}$, 25, 50 ரூபாய் பெறுமான சில்லரை நோட்டுகளைக் கொடுத்துவிட்டு அவற்றிற்குச் சரியான 100 ரூபாய் நோட்டு பெற்றுக்கொள்ளலாம்.

சிறுவர்க்கான கதை

வல்லமைபெற்ற வில்லாளி (தொடர்ச்சி.).

ஒரு ராஜகன்னிகையைப் பிடிக்கவந்த ராக்ஷதர்களைக் கொன்றுவிட்டு வில்லாளி தன் தகப்பனை நினைத்துக்கொண்டு ஓடிப்போயினுனே; அவன் போன சிறிதுநேரத்துக்கெல்லாம் அந்நகரத்து அரசன் விழித்துக்கொண்டான். விழித்துக்கொண்டு பார்க்கையில் சபா மண்டபத்திலே மூன்றுராக்ஷதர்கள் செத்து விழுந்துகிடந்தார்கள். அதைக் கண்டவுடனே அவன் தன் மகள் படுத்திருக்குமிடத்துக்குப் போய் அவளை எழுப்பி, பெண்ணே இந்த ராக்ஷதர்களைக் கொன்றது யார் உனக்குத் தெரியுமா என்று கேட்டான். அதற்கு அப்பெண், ஐயா, நான் தூங்கிக்கொண்டிருந்தேன், யார் கொன்றுரோ எனக்கு ஒன்றும் தெரியாதே என்றுள். பின்பு அவள் எழுந்து தன் பாதரக்ஷைகளையெடுத்துத் தரித்துக்கொள்ளப்போனுள்; வலது கால் பாதரக்ஷையில்லை. அப்படியே அவளுடைய பட்டாடையில் ஒரு புறத்து மூன்றிலொன்றை கிழிக்கப்பட்டிருந்தது. பீதாம்பரத்திலும் பாதி கிழிக்கப்பட்டிருந்தது. அதுகண்டு அரசன் இதென்ன புதுமையென்று மிகவும் ஆச்சரியம்கொண்டு, மந்திரி பிரதானி முதலிய ராஜாங்கத்து அதிகாரிகள் அனைவரையும் அழைப்பித்து, இந்த ராக்ஷதர்களையெல்லாம் கொன்று நம்மகளை விடுவித்தது யார் என்று வினவினுன். அதற்கு ஒருவரும் தகுந்தவிடை கொடாமலிருந்தது கண்டு, ஒரு கண் பொட்டையாய் மிகக் குரூபியான சேனுபதி ஒருவன் தனக்கு அது நல்ல தருணமென்று எண்ணி, இளவரசியை விடுவித்தவன் நானே என்றுன். அவன் சொல்வது உண்மையேயென்று நம்பி அரசன், ஆயின் தன் மகள் அவனுக்கே மணமாலை சூட்டவேண்டுமென்றுன். அதைக்கேட்டு இளவரசி, நான் இத்தனைநாள் காத்துக் கடைசியில் இந்தக் குரூபியையா கலியாணம் செய்துகொள்கிறது என்று மிகவும் விசனங்கொண்டு தகப்பனைப் பார்த்து, ஐயா, இவரைக் கலியாணம் செய்துகொள்வதைப்பார்க்

கிலும் எங்கேயாவது ஓடிப்போவதே எனக்கு உத்தமமாகத் தோன்றுகிறது; ஒருபோதும் நான் இவனைக் கலியாணம் செய்துகொள்ள மாட்டேனென்று சொல்ல, அரசன், உனக்கு நீயே ராஜா, உன் மனம்போனபடி நடக்கலாம். ஆயின் எனக்கு நாக்கு இரண்டில்லை; நீ இவனைக் கலியாணம் செய்துகொள்ளாத பக்ஷத்தில், இப்போது நீ அணிந்திருக்கும் உயர்ந்த ஆடையாபரணங்களையெல்லாம் இங்கேயே வைத்துவிட்டுச் சாதாரணமான ஒரு உடையைத் தரித்துக்கொண்டுதான் ஓடிப்போகவேண்டும். அப்போதும் மனம்போனவழியெல்லாம் ஓடக்கூடாது; ஒரு குயவனிடம்போய் மட்பாத்திரம் வாங்கி விற்று ஜீவனம்பண்ணிக்கொண்டிருக்கவேண்டும் எனத் திட்டம் செய்தான்.

ஒரு குரூபியைக் கலியாணம் செய்துகொள்வதைப் பார்க்கிலும் இது நல்லதுதானென்று அப்பெண்மணி தான் தரித்திருந்த ஆடையாபரணங்களை வாங்கியெறிந்து பழைய கந்தைத்துணியொன்றை உடுத்திக்கொண்டு ஒரு குயவன் வீடுபோய்ச் சேர்ந்தாள். பின்பு அவ்வீட்டுக் குயவனைக் கண்டு அவள், தன் கையில் சில மட்பாத்திரங்கள் கொடுத்தால் அதைத் தான் கடைத்தெருவில் கொண்டுபோய் விற்றுச் சாயங்காலம் அதன் கிரயத்தைக்கொண்டுவந்து செலுத்துகிறேனென்று சொல்லிச் சில பாத்திரங்கள் கடனாக வாங்கிக்கொண்டு விற்கப்போனாள். அப்போதும் அரசன் சும்மா இருக்கவில்லை; அவளைக் கடைத்தெருவில் தனியாய் ஓரிடத்தில் சரக்கு வைத்துவிற்கத் திட்டம்செய்து அவ்வழியாகவே அநேகம் வண்டிகளை ஓட்டிக்கொண்டுபோம்படிக் கட்டளையிட்டான். அப்படியே இளவரசி குயவனிடத்தில் சரக்கு வாங்கிக்கொண்டுபோய் அரசன் குறித்தவிடத்தில் விற்றுக்கொண்டிருக்கையிலே, பல வண்டிகள் அவ்வழியாய் ஓடிவந்து மட்பாத்திரங்களையெல்லாம் உடைத்துவிட்டன. ஐயோ பாவம், அந்தப் பேதைப்பெண் இனி என்னசெய்வாள்! நான் கூலிவேலைசெய்து ஜீவிப்பதுகூடத் தெய்வத்துக்குப் பொறுக்கவில்லையே! மட்பாத்திரங்களை விற்கும்படி கொடுத்த குயவனுக்கு நான் என்ன உத்தரவு சொல்லுகிறதென்று புலம்பியழுதாள். இவ்வருத்தத்தைப் பொறுக்கமாட்டாமல் அதனாலாவது அவள் சேனாபதியைக் கலியாணம் செய்துகொள்ள உடன்பட்டு வரட்டுமென்பது அரசனுடைய கருத்து. ஆயினும் அவள் மறுபடியும் அக்குயவனிடத்திற்கே போய், தனக்கு இன்னும் சில பாத்திரங்கள் கொடுத்தால் அதையும் விற்று மறுநாள் மாலைவேளையில் அவ்விரண்டுக்கும் பணம் செலுத்துகிறேன் என்று வேண்டிக் கேட்க, அவன் முன்கொடுத்த பாண்டங்களுக்குப் பணம் செலுத்துகிறவரையில் வேறொன்றும் தருவதில்லையென்று மறுத்துவிட்டான். அதனால் அவள் மறுபடியும் தந்தையிடம் போம்படி நேரிட்டது. கண்ணும் கண்ணீருமாய்த் தகப்பன் எதிரேபோய் நின்று, தேசயாத்திரை போகும்படி

தனக்கு உத்தரவு கொடுக்கவேண்டுமென்று அவள் வேண்டிக் கேட்க, அரசன், நீ அப்படி செய்யக்கூடாது; நடுக்காட்டில் நான் ஒரு குடிசை கட்டுவிக்கிறேன். உன் வாழ்நாள்முழுதும் நீ அதி லேயே இருந்து அவ்வழியாக வருகிறவர்களுக்கெல்லாம் சோறு சமைத்துப்போட்டுக் காலம்கழிக்கவேண்டுமென்று சொல்லி, அப் படியே நடுக்காட்டில் சிறு வீடு ஒன்று கட்டுவித்து அதன் தெருப் புறத்திலே பலரும் பார்த்துத் தெரிந்துகொள்ளும்படி 'தருமசத் திரம்' என்று ஒரு பலகையில் எழுதி ஒட்டிவைத்தான்.

வேறுவிதியில்லாமல் அவ்விளவரசி அந்தக் குடிசையிலேயே போயிருந்து வழிப்போக்கர்களுக்கெல்லாம் சோறு சமைத்துப் போட்டுக்கொண்டிருந்தாள்; அப்படியே சிலகாலம் சென்றது. இந்தப் பெருங்காட்டின் நடுவே ஒரு பெண் வருகிறவர்களுக்கெல் லாம் தருமத்துக்குச் சோறுபோட்டுக்கொண்டு இருக்கிறுளென்ற செய்தி கொஞ்சம் கொஞ்சமாய் நாளளவிலே தேசமெங்கும் பரவி யது. கடைசியாய் இச்செய்தி வல்லமைபெற்ற வில்லாளி காதி லும் வீழ்ந்தது. அதைக் கேட்டவுடனே அவன், சோற்றுக்கு வழி யில்லாமல் அல்லாடுகிற நமக்கு இது ஒரு நல்லசெய்திதான். நாம் அங்கே போய்ச் சுகமாய்ச் சாப்பிட்டுக்கொண்டிருக்கலாம் என்று நினைத்துத் தன் வில்லையும், முன் தான் கொண்டுவந்த அடையாளங் களெல்லாம் கட்டிவைத்த மூட்டையையும், கத்தியையும் எடுத்துக் கொண்டு அந்தத் தருமசத்திரம் இருக்குமிடம் தேடிப்போகப் புறப் பட்டான். புறப்பட்டு அந்தப் பெருங்காட்டு வழியாய்ப் போகை யில் அங்கோரிடத்தில் ஒரு சிறு வீடு இருந்தது. அதன் முன்புறத் தில் தருமசத்திரம் என்று எழுதியிருக்கக் கண்டு நாம் தேடிவந்த விடம் இதுதானென்று அதற்குள்ளே அவன் நுழைந்தான். நுழைந் தவுடனே, எனக்குப் பசி மிகவும் அதிகமாயிருக்கிறது; சாப்பாட் டுக்குச் சீக்கிரம் ஏதாவது வேண்டுமென்று கேட்க, அவ்வீட்டுக்குள் இருந்த பெண்ணரசி, நீர் யார், எங்கிருந்து வருகிறீர், எங்கே போகி றீர் என்று வினவியதற்கு, அவன், நான் இப்படியேதான் தேசங்கள் தோறும் சுற்றித் திரிகிறவன் என்றுன். பின்பு அவள் அவன் கையி லிருந்த கத்தியில் தன் தந்தையின் பெயர் பதிந்திருக்கக் கண்டு, இந்தக் கத்தி உங்களுக்கு எங்கே கிடைத்தது என்று கேட்டாள். உடனே அவன் ஏதோ ஒரு குறியைக் கண்டு அவளைத் தெரிந்து கொண்டு, நீ ராஜகுமாரத்தியல்லவா என்று வினவ, அவள் ஆமென்று தலையசைக்கவே, அவன், நான் இந்தக் கத்தியாலேதான் மூன்று ராக்ஷதர்களுடைய தலைகளையும் வெட்டினேன். அதற்கு இதோ திருஷ்டாந்தம் வேண்டுமானாலும் காட்டுகிறேன் பார் என்று சொ ல்லி, தன் மூட்டையிலிருந்த ராக்ஷதர்களுடைய மூன்று நாக்குகளை யும், பாதரக்ஷையையும், பட்டுத் துண்டுகளையும் எடுத்துக் காட்டி னுன். அவற்றைப் பார்த்தபோது அவளுக்கு உண்டான ஆநந்தத்

தை நாம் என்னென்று சொல்லலாம்! அவள் கொடிய ராக்ஷதர்கள் கையினின்றும் நம்மைக் காத்தருளினவன் இந்த மகா புருஷனே யென்று மிகவும் அகமகிழ்ந்தாள்.

இனி அந்தக் குரூபியைக் கலியாணஞ்செய்துகொள்ளும்படி தந்தை தன்னை நிர்ப்பந்திப்பார் என்கிற பயம் அச்சிறுமியின் மனதைவிட்டு அப்போதே நீங்கிப்போயிற்று. உடனே அவ்விருவரும் அவ்விடம் விட்டுப் புறப்பட்டு அரசன் அரண்மனைபோய்ச் சேர்ந்தார்கள். இளவரசி அந்த வில்லாளியைத் தன் தந்தையினிடம் அழைத்துக்கொண்டு போய், என்னை அரக்கர்கள் கையில் அகப்பட்டுக்கொள்ளாமல் ஆதரித்துக் காத்தருளினவர் இந்த மகா ராஜனே; அப்படியிருக்க நீங்கள் யாரோ ஒரு குரூபியைக் கொண்டுவந்து காட்டினீர்களே என்றாள். முதலில் அவள் சொன்ன பேச்சில் அரசனுக்குச் சிறிதும் நம்பிக்கை உண்டாகவில்லை; ஆயினும் அவன் காட்டிய குறிகளைப் பார்த்தபிறகு சந்தேகமறத் தெளிவாய்த் தெரிந்துபோயிற்று. அதனால் அவன் அந்தக் குறிகளைக் கண்டதக்ஷணமே ஆநந்தம் பூரித்து அந்த வில்லாளியை மடிமேல் வைத்து முத்தமிட்டுக்கொண்டு, தன் மகள் அவனுக்கே மணமாலை சூட்ட வேண்டுமென்று உறுதிமொழி கூறினான். அதைக் கேட்டவுடனே இளவரசி ஆநந்தக்கடலில் ஆழ்ந்து, இவர் சொன்ன பேச்சை எப்போது நிறைவேற்றப்போகிறாரென்று அதே கவனமாயிருந்தாள்.

இவ்வதிசயச் செய்தியை வெளிப்படையாய் அனைவர்க்கும் தெரிவிக்கவேண்டுமென்று அரசன் அன்றையதினம் ஒரு மகா சபை சேர்த்தான்; அதற்கு அனைவரும் வந்திருந்தார்கள். இளவரசி தனக்கே மனையாளாகப்போகிறாளென்று வீண் மனோராஜ்யம் செய்துகொண்டிருக்கும் சேனாவீரனும் அப்போது வந்திருந்தான். வில்லாளி யாரோ ஒரு தேசாந்தரியென்றே எல்லோரும் எண்ணியிருந்தார்கள். அனைவரும் வந்து சேர்ந்து அவரவர்க்கேற்ற ஆஸனங்களில் உட்காந்தபிறகு அரசன் எழுந்து சேனாபதியைப் பார்த்து, உன்னை நான் இந்தச் சபைநடுவில் இரண்டொரு கேள்வி கேட்கிறேன்; அதற்கு நீ தக்க விடைகொடுக்கவேண்டும். மூன்று ராக்ஷதர்களை நீ கொன்றதாகச் சொன்னாயல்லவா? அது வாஸ்தவமாயின் அவர்களின் நாக்கு எங்கே என்றான். செத்துக்கிடந்த ராக்ஷதர்களின் வாயைத் திறந்துபார்த்தார்கள். ஒருவன் வாயிலும் நாக்கில்லாமற்போகவே சேனாபதி இவர்களுக்கு நாக்கே கிடையாது என்றான். அதுகேட்டு அரசன் உலகத்தில் நாக்கில்லாத பிராணி ஒன்று உண்டென நீ எங்கேயாவது கேள்விப்பட்டிருக்கிறாயா? நீ சொல்வது ஒருபோதும் ஏற்ற சமாதானமாகாதென்று சொல்ல, அந்தச் சேனாவீரன் மற்றொன்றும் தோன்றாமல், தலைபோகிறகாலந்தான் இப்படியாயிற்றென்று தைரியமாய்ச் சொல்லிவிட்டான்.

பின்பு அரசன் உண்மை இப்படிப்பட்டதென்று அங்குள்ளவர்கள் அனைவர்க்கும் எடுத்துக் காட்டி, ராஜதுரோகம்செய்ய நினைத்த சேனாபதியைச் சிறையில் வைத்துச் சிரசாக்கினைசெய்யத் தீர்மானித்தான். அந்த வில்லாளியினுடைய வல்லமையைக் கண்டு எல்லோரும் கொண்டாடினார்கள். பின்பு ஒரு நல்ல சுபமுகூர்த்தத்தில் வில்லாளிக்கும் இளவரசிக்கும் விவாகம் நடத்தப்பட்டது. தன் கலியாணத்துக்காக வந்த தாய்தந்தையர்களைத் திரும்பி அவர்களுடைய ஊருக்குப் போக விடாமல் வில்லாளி தன்னோடுகூடவே அவ்விடத்தில் சுகமாக வைத்துக்கொண்டிருந்து, அந்தக் கிழவரசன் காலத்துக்குப்பிறகு தானே பட்டந்தரித்து வெகுகாலம் குடிகளை க்ஷேமமாய்ப் பரிபாலித்துவந்தான்.

சமாசாரம்.

சுதேசப் பெண்டிர்களுக்கு வீட்டிலேயே வித்தைகற்பித்தல்.— நாஷனல் இந்தியன் அஸ்ஸோஷியேஷன் என்னும் சங்கத்தைச் சேர்ந்த சென்னைப் பிரிவினர்கள் சுதேச கனவான்களுடைய பெண்கள் பள்ளிக்கூடத்தை விட்டு வீட்டு விசாரணைகள் செய்துகொண்டிருக்கும் காலத்திலும் அவர்களுக்கு வீடுகளிலே போய்த் தேசபாஷைகளில் கல்விப்பயிற்சி, தையல்வேலை, சங்கீதம் முதலியவை கற்றுக்கொடுக்கும்பொருட்டு நன்றாய்ப் பழகிய சில சுதேசப் பெண்டிர்களை உபாத்தியாயிகளாக நியமிக்கும்படி நிச்சயித்திருக்கின்றனர்.

மதசம்பந்தமான விஷயங்களில் சிறிதும் பிரவேசிக்காதபடி வெகு கண்டிப்பாய்க் காத்துவருவார்கள். அந்தந்தக் குடும்பத்தின் வரவுக்கேற்றபடியே படிக்கும் பெண்களுக்கு வேதனம் விதிக்கப்படும். ஆயினும் ஒரு பெண்ணுக்கும் எட்டு அணாவுக்குக் குறைந்த வேதனம் விதிப்பதில்லை. இவ்விஷயத்தில் உபாத்தியாயியாயிருக்க விருப்பமுள்ள பெண்டிர்கள் பிராந்தர் துரைசானிக்கு விண்ணப்பம் எழுதிக்கொள்ளக்கடவர்கள்.

படிக்க விரும்புகிற பெண்களின் தொகை இவ்வளவென்றும் அவர்களுக்காகக் கொடுக்கக்கூடிய சம்பளம் இவ்வளவென்றும் விண்ணப்பங்கள் எழுதிக்கொள்ளலாம்,

இஸபேல் பிராந்தர்
நாஷனல் இந்தியன் அஸ்ஸோஷியேஷன்
காரியதரிசி.
சென்னை.

C. K. S. Press, Vepery, Madras, 1882.